# ஸ்ரீ
# ராம ராஜ்யம்

W
N49
108806

# ராம ராஜ்யம்.

(முதல் புஸ்தகம்)

## அரசாங்கம்

"திருவரங்கம்"

எழுதியது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
16 JUN 1949
MADRAS

513
2-49

திருமலை-திருப்பதி - தேவஸ்தான அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

சித்திரை; 1949 மே௴

விலை அணா 12.

W
N49

108806

ஸ்ரீ:

# அறிவிப்பு.

உலகமெங்கும் போற்றப்படும் இந்தியா என்னும் இப் பரத நாட்டின் பெருமைக்கெல்லாம் மூல காரணம் முற்காலத்தில் இங்கிருந்த ஆத்ம ஞானமும் அதனால் சிறந்தோங்கிய உயர்ந்த நாகரிகமும் தான். சுயநலம் பகை பக்ஷபாதம் எதுவுமின்றி, உலகம் முழுதும் வாழ்ந்துய்ய வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன், கடுந்தவம் புரிந்து பெற்ற பேரறிவு கொண்டு நம் முன்னோர்கள் அவ்வித உயர்ந்த நிலையில் நின்று வாழ்வதற்கேற்ற வழியைக் காட்டியிருக்கின்றார்கள். கால க்ரமத்தில் மஹா ஜனங்கள் அவ்வழியை மறக்கவே நாடு சீர் குலைந்தது. மறுபடியும் அவ்வித உயர்ந்த நிலையைப் பெற வேண்டுமானால் அவ்வழியை உள்ளபடி அறிந்து பின்பற்ற வேண்டும்.

ஒன்று நம் புராதன மார்க்கத்தைக் கடைப்பிடித்தொழுக வேண்டும். அல்லது சண்டையும் சச்சரவும், வியாதியும் விளைவும், பசியும் பஞ்சமும் மலிந்து செத்துப் போகத் தயாராயிருக்க வேண்டும். இது இரண்டொழிய வேறு கதியில்லை. நமது முன்னோர்களை மூடர்களாக்கி, நம்முடைய பிரதாபத்தால் பிழைப்பது என்பது முக்காலும் கூடாத காரியம்.

பஞ்சத்தைத் தவிர்ப்பதற்காகச் செயற்கை மழையையும், கலஹங்களை அடக்கப் போலீஸை விருத்தி செய்வதையும் நினைக்கின்றார்களே யன்றி இவற்றின் மூல காரணத்தைக் கண்டு அதை அகற்றுவதற்கு என்ன வழி என்பதை ஆலோசிக்கப் புகுவதில்லை. சாஸ்திரம் ஸம்பிரதாயம் ஒன்றுமில்லாமல் தாமாக ஒருவித நாகரிகத்தை வளர்த்த மேனாட்டார் இப்போது தாங்க முடியாத சங்கடத்திற்குள்ளாகித் தத்தளித்துக் கொண்டிருக்கின்றனர். இந் நிலையில் அவர்கள்

ஸ்ரீ:

# ராம ராஜ்யம்.

(முதல் புஸ்தகம்)

## அரசாங்கம்

“திருவரங்கம்”

எழுதியது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
16 JUN 1949
MADRAS

திருமலை-திருப்பதி - தேவஸ்தான அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

விரோதி : சித்திரை; 1949 மே௴

விலை அணா 12.

W
N49

PRINTED AT
T. T. D. PRESS,
TIRUPATI.
2000 Copies
9-5-49.

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 108806
EGMORE MADRAS

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
16 JUN 1949
MADRAS



श्रीराघवं दशरथात्मजमप्रमेयं
सीतापतिं रघुकुलान्वयरत्नदीपम् ।
आजानुबाहुमरविन्ददलायताक्षं
रामं निशाचरविनाशकरं नमामि ॥

ஸ்ரீ ரகு மஹாராஜன் வம்சத்தில், தசரத சக்கரவர்த்திக்குப் புத்திரராய்த் தோன்றி, இவ்வளவென்று எண்ணமுடியாத மேன்மையுடையவராய், ஸ்ரீ ஸீதாப் பிராட்டியை மணந்து, ரகு குலத்தை மிகவும் விளங்க வைத்து, அரக்கர்களை யெல்லாம் தொலைத்த, நீண்ட புஜங்களும், செந்தாமரை போன்ற கண்களுமுடைய ஸ்ரீ ராமபிரானை வணங்குகின்றேன்.

## அடக்கம்.


| | | | பக்கம். |
|---|---|---|---|
| 1. | நடு நிலைமை | ... | 1 |
| 2. | தமிழ் அரசு | ... | 2 |
| 3. | யோக்யதை | ... | 4 |
| 4. | லக்ஷணம் | ... | 5 |
| 5. | இப்போது | ... | 8 |
| 6. | அரசன் | ... | 10 |
| 7. | ஜனாதிபதி | ... | 12 |
| 8. | ஜனங்கள் | ... | 14 |
| 9. | அறிவு | ... | 16 |
| 10. | உறுதி | ... | 19 |
| 11. | குற்றம் தவிர்த்தல் | ... | 21 |
| 12. | ஆரோக்கியம் | ... | 25 |
| 13. | அமானுஷம் | ... | 26 |
| 14. | வேள்வி | ... | 29 |
| 15. | பகவத்கீதை | ... | 32 |
| 16. | திருக்குறள் | ... | 34 |
| 17. | திருப்பாவை | ... | 36 |
| 18. | ஆத்ம சக்தி | ... | 37 |
| 19. | மதவாரம் | ... | 38 |
| 20. | முயற்சி | ... | 42 |
| 21. | அரசாங்கத்தார் | ... | 43 |
| 22. | பிரஜைகள் | ... | 49 |
| 23. | பிரார்த்தனை | ... | 52 |




ஸ்ரீ:

# ராம ராஜ்யம்.

(முதல் புஸ்தகம்)

## அரசாங்கம்.

### 1. நடு நிலைமை.

நமது நாட்டில் பல மதத்தினர் இருக்கின்றனர். எல்லோருக்கும் பொதுவானது அரசாங்கம். எம் மதத்தினராயினும். "இவ்வரசாங்கம் நம்முடையது. இதன் கீழ் நாமும் க்ஷேமமாயிருக்கலாம். மற்றவர்களுக் குண்டான உரிமைகளெல்லாம் நமக்கு முண்டு" என்று இவ்வித நம்பிக்கையும் நிம்மதியும் கொண்டு வாழும்படி இருக்க வேண்டும். இதுவே நியாயம். இதற்குத் தக்கவாறே நமது தலைவர்கள் "நமது அரசாங்கம் மதப் பற்றற்றது" என்று விளம்பரப்படுத்தி அதன்படி ஸர்வ காரியங்களையும் நடத்தி வருகின்றனர். ராம ராஜ்யத்தை ஸ்தாபிக்க நாம் முயன்றால் இது அதற்கு முரணாகாதோ வெனச் சிலர் ஸந்தேஹிக்கலாம். ஆனால் உண்மையில் முரண்பாடு ஒன்றுமில்லை. அரசாங்கம் ஒரு மதத்தைச் சேர்ந்தவர்களிடத்தில் பக்ஷபாதமும் மற்றொரு மதத்தைச் சேர்ந்தவர்களிடத்தில் த்வேஷமும் பாராட்டாமல் நடு நிலைமையிலிருந்து எல்லோருடைய க்ஷேமத்தையும் கருத வேண்டியது அதன் கடமையாகும். ஜனங்களும் தங்கள் தங்கள் மதத்தில் மிகுந்த பற்றுள்ளவர்களாய் அதற்

கேற்ற ஆசாரங்களையும் அநுஷ்டானங்களையும் கைப்பற்றி நடக்க வேண்டியது மிக மிக அவச்யம். ஆயினும் பிற மதத்தினருக்கு எவ்விதத்திலும் இடைஞ்சலும் மன வருத்தமுமுண்டாகாதபடியும் மதம் வேறாயினும் ஒருவர்க்கொருவர் நேசத்துடனும் மரியாதையுடனும் நடந்து கொள்ளும்படியும் அவ்வளவு கம்பீரமான மனப்பான்மையுடன் வாழப் பழக வேண்டும். முக்கியமான இந்த லக்ஷியத்தை மறக்காமலே தான் ராம ராஜ்யத்தைப்பற்றி இங்கு நாம் பேசுகின்றோம்.

ராம ராஜ்ய லக்ஷணங்களில் ஹிந்து மதத்தின் முக்யமான அம்சங்கள் சில அடங்கி யிருப்பதால் அவற்றைப் பற்றிப் பேசப்படுபவை யெல்லாம் அம் மதத்தினரால் மாத்திரம் கவனிக்கப்பட வேண்டியவையே யாயினும் மற்றவை பொதுவாக எல்லோரும் கவனிக்க வேண்டிய பொது தர்மங்கள் என்பது குறிக்கொள்ளத் தகுந்ததாகும்.

பல மதத்தினர் வஸிக்கும் நாட்டில் ஒரு மதத்தைச் சேர்ந்தவர் மற்ற மதத்தைச் சேர்ந்தவர்களிடத்தில் துவேஷம் சிறிதுமின்றி ஸஹிப்புத் தன்மையும் நேச பாவமும் நிரம்பப் பெற்றிருப்பது மாத்திரமேயன்றி பிற மதத்தினர் அவர்களுக்குரிய தர்மங்களைச் செய்யும் போது மிகுந்த ஆதரவு காட்டிப் புகழ்ந்து மேல்மேலும் அவர்களுக்கு அவற்றில் உத்ஸாஹ முண்டாம்படி செய்வாரகில் இதுவும் ராம ராஜ்யத்திற்கு ஒரு லக்ஷணமாகும்.

## 2. தமிழ் அரசு.

தமிழ் அரசு என்று தனித்த ஒரு அரசு உண்டா? ராம ராஜ்யம் என்று இந் நூலுக்குப் பெயரிட்டுத் தமிழரசைப் பற்றிப் பேசினால் இதற்கும் அதற்கும் என்ன ஸம்பந்தம்? என்ற கேள்வி இங்கே பிறப்பது இயற்கை. இதற்கு ஸமாதானம்.—



ராம ராஜ்யம் என்பது எதுவோ அதுவே தான் தமிழரசு என்பது. இதற்கும் அதற்கும் ஒருவித வேற்றுமையும் கிடையாது, கருதப்படவுமில்லை. ஆயினும் தமிழரசு என்று தலைப்பு வைத்து இங்கு முதலில் நாம் பேசப் புகுந்ததின் கருத்துப் பின்வருமாறு :—

பணம், விஷயாநுபவம், பிற நாடுகளை அடக்கி ஆள்வது, இவற்றில் அபார மோகம் கொண்டு அதன் விளைவாக மஹா யுத்தம் செய்து களைத்துச் சங்கடப்பட்டு நிற்கும் உலகம் இப்போது சாந்தியும் ஸௌகமும் பெற்று வாழ்வதற்குரிய வழியைக் காட்ட நம்முடைய பாரத நாட்டை எதிர்பார்த்து நிற்கின்றது. பாரத நாட்டினுள் நம்முடைய இந்தத் தமிழ் நாடே அப்பெரிய காரியத்தைச் செய்யத்தக்க சக்தி வாய்ந்த தென்பது எம்முடைய தீர்மானம். நமது பாரத நாட்டின் மற்றப் பாகங்கள் தாழ்ந்தவை என்றோ நம் தமிழ் நாடே மற்றவைகளை விடச் சிறந்தது என்றோ இப்படி ஒரு தகாத எண்ணங் கொண்டு நாம் பேசவில்லை. தென் மொழியிலும் வட மொழியிலும் உலகத்திலேயே மிகப் புராதனமான அரிய பெரிய நூல்களையும் அவற்றை ஒட்டி இடைவிடாது நடந்து கொண்டிருக்கும் பழக்க வழக்கங்களையும் இன்னும் கொஞ்சம் காப்பாற்றிவரும் இத் தமிழ்நாடு ஊக்கத்துடனும் விவேகத்துடனும் சிறிது முயன்றால் வெகு எளிதில், வெகு சீக்கிரத்தில், தன்னை ராம ராஜ்யமாக மாற்றிக் கொண்டு இந் நாட்டின் மற்றப் பாகங்களுக்கும் பிற நாடுகளுக்கும் அத்தகைய உத்தமமான அரசைப் பெற, நிலை காட்ட, வழிகாட்டியாகலாம். எப்பாடு பட்டாவது அவச்யம் ஆகவேண்டும். மற்ற நாடுகளில் அமைதியற்று அலங்கோலமான நிலை ஏற்பட்ட போது நம் நாடு மட்டும் சீரும் சிறப்புமாக வாழ இயலாது. ஆகவே தன் நலத்தைக் கருதியாவது முதலில் நம்

தமிழ் நாடு சீர்பட வேண்டும். பிறகு நாடுகள் எல்லாம் சீர்படும்படி முயலவேண்டும்: அதற்குரிய ஸேவையை நாம் செய்ய வேண்டும்.

இப்படி ராம ராஜ்யம் நம் பாதநாடு முழுவதும் ஸ்தாபிக்கப்பட வேண்டியதற்கு முன் அது தமிழ் நாட்டரசாக உருவெடுக்க வேண்டியது அவச்யமாகின்றது. எல்லாவற்றிற்கும் அதிபதியான பகவான் அயோத்தியில் பிறந்த காரணத்தினால் அயோத்யாதிபதி எனப்படுவதுபோல் எல்லா நாடுகளுக்கும் ஏற்பட வேண்டிய ராம ராஜ்யம் என்கிற தர்ம ராஜ்யம் தமிழர்களான நம்முடைய இந்தத் தமிழ் நாட்டில் முதலில் தோன்றித் தமிழ் ராஜ்ய மெனப்படுமாயின் அது மிகவும் பொருத்த முள்ளதே.

## 3. யோக்யதை.

இத்தகைய அரசு உடனே இங்குத் தோன்றும்படி செய்ய யோக்யதையைப் பெற்றிருப்பதால் இத் தமிழ் நாட்டில் பிறந்த ஒவ்வொருவரும் அதற்காகப் பாடுபட வேண்டியது அவரவர் கடமையாகும். யோக்யதையாவது உயர்ந்த அறிவும், பலபல அறிய நூல்களும், அநாதி பரம்பரையாக வந்திருக்கின்ற ஆசார வ்யவஹாரங்களும் பெற்றிருக்கை. இவை எல்லாம் அறவே மறந்து பெரும்பாலோர் உதாஸீனமாய்த் தமது ஜீவநமாத்திரத்தைக் கருதியும் மற்றும் சிலர் குறுகிய நோக்கங்களுடன் பலவிதச் சண்டை சச்சரவுகளைக் கிளப்பிக் கொண்டும் இருப்பது மிகவும் வருந்தத்தக்க விஷயம். ஆகவே இத் தமிழ் நாட்டில் பிறந்த ஒவ்வொருவரையும், ‘ எவ்வித கோபதாபமுமில்லாமல், த்வேஷப் பான்மையை அறவே ஒழித்து, அமைதியாய், இது அவச்யமாகச் செய்ய வேண்டியது, இது அநாவச்யகம், இது செய்யவே தகாதது என்று தானே சிந்தித்தும் அறிஞர்களிடத்தில்



கேட்டும் பரிபூர்ண விவேகம் பெற்று, அதன்படி நடந்து, தாமும் பிறரும் ஸுகமாக வாழ்வதற்குரிய, இதற்கு மேற்பட்ட முறை இல்லை என்னும்படி அத்யுத்தமமாய், மற்ற நாட்டாரும் கொண்டாடிப் பின் பற்றும்படியாய் இருக்கும் ராம ராஜ்யம் என்கிற சிறந்த அரசாட்சி முறையை ஸ்தாபித்துச் சாச்வதமாய் நடத்த முயல வேண்டும் ’ என்று கெஞ்சிக் கூத்தாடிக் கேட்டுக் கொள்வது அவச்யமாகின்றது.

## 4. லக்ஷணம்.

இனி ராம ராஜ்யம் என்றால் என்ன? அது எப்படிப்பட்டது? என்று பார்ப்போம். ஸ்ரீராமன் ராஜ்யத்தைப் பெற்று ஆண்ட போது உலகம் எப்படி இருந்தது என்பதை ஸ்ரீ வால்மீகி முனிவர் இரண்டு தடவை கூறியிருக்கிறார்— ஸங்க்ஷேப ராமாயணத்தின் முடிவிலும், யுத்தகாண்டத்தின் இறுதியிலுள்ள பட்டாபிஷேக ஸர்க்கத்தின் முடிவிலும்; அது பின் வருமாறு :—

### I

ஸ்ரீராமன் மறுபடியும் ஸீதையுடன் கூடி ராஜ்யத்தை அடைந்தார்.—

(1) ஸர்வ ஜநமும் களிப்பும் ஸுகமும் பெற்றது.

(2) த்ருப்தியுடன் இருந்தது.

(3) புஷ்டியுடன் வாழ்ந்தது.

(4) தர்மத்தில் நிலை பெற்றது.

(5) வியாதியில்லை வேதனையில்லை.

(6) துர்பிக்ஷ பயமில்லை.

(7) புத்ர மரணம் ஒன்றுமில்லை.

(8) ஸ்திரீகள் ஒருபோதும் விதவைகளாகவில்லை.

(9) நெருப்புப் பயமில்லை.

(10) ஒருவரும் ஜலத்தில் மூழ்கிச் சாவதில்லை.

(11) காற்றின் பயமில்லை.

(12) ஜ்வரத்தினாலுண்டான பயமில்லை.

(13) பசிப்பிணி யில்லை.

(14) திருட்டுப் பயமில்லை.

(15) நாடு நகரங்கள் தனத்தாலும் தான்யத்தாலும் நிறைந்திருந்தன.

(16) க்ருத யுகத்தில் போல் எல்லோரும் எப்போதும் ஆநந்த பூர்ணர்களாய் இருந்தனர்.

## II

ராமன் அரசாளும் போது

(1) (ஸ்திரீகள்) விதவைகளாகிப் புலம்பவில்லை.

(2) கொடிய ஜந்துகளின் பயமில்லை.

(3) வியாதியினா லுண்டாகும் பயமில்லை.

(4) உலகமே திருடனற்ற தாயிற்று.

(5) ஒருவருக்கும் ஒரு தீங்கும் உண்டாகவில்லை.

(6) வயதானவர்கள் சிறுவர்களுக்கு ப்ரேத க்ருத்யங்கள் செய்யவில்லை.

(7) எல்லாம் ஆநந்தம் நிறைந்திருந்தது.

(8) யாவரும் தர்மத்தையே ப்ரதானமாகக் கொண்டனர்.

(9) ராமனைப் பார்த்து (ஜனங்கள்) ஒருவருக்கொருவர் ஹிம்ஸை செய்யாமலிருந்தனர்.

(10) ஆயிரக் கணக்கான ஆண்டுகள் ஜீவித்திருந்தனர்.



(11) ஆயிரக் கணக்காக ஸந்ததி வ்ருத்தியைப் பெற்றனர்.

(12) எவ்விதப் பிணியும் துக்கமுமில்லாம லிருந்தனர்.

(13) ராமன் ராமன் ராமன் என்றே ஜனங்கள் பேசிக் கொண்டிருந்தனர்.

(14) மரங்கள் பருத்த நீண்ட கிளைகளுடன் செழித்து ஓங்கி வளர்ந்தன: அவற்றில் புஷ்பங்களும் பழங்களும் எப்பொழுது மிருந்தன.

(15) காலத்தில் மழை பெய்தது.

(16) காற்று ஸுகமாக வீசிற்று.

(17) ப்ராம்மண க்ஷத்ரிய வைச்ய சூத்ரர்கள் லோபித்தனமின்றித் தமது கர்மங்களைச் செய்தனர். தம் தம் கர்மங்களாலேயே த்ருப்தி யடைந்தனர்.

(18) ப்ரஜைகள் தர்மத்திலேயே மகிழ்ச்சி யுற்றனர்: பொய்யுள்ளவர்களல்லர்.

(19) யாவரும் அவரவர்களுக்குரிய லக்ஷணங்களைக் கொண்டிருந்தனர்.

(20) எல்லோருக்கும் தர்மத்திலேயே நோக்கு இருந்தது.

இவைகள் அல்ப வேறுபாட்டுடன் இரண்டுதரம் கூறப்பட்டிருப்பது ராஜ்ய பரிபாலனத்திற்கு முக்ய ப்ரயோஜனங்கள், லக்ஷ்யங்கள், இவையே என்று தெளிவு பெறக் காட்டுவதற்காக. ராம ராஜ்யத்தில் இவை எல்லாமிருந்தன. இவையுள்ளது எதுவோ அதுவே ராம ராஜ்யம். இவை யில்லையேல் ராம ராஜ்யமில்லை. ராஜ்யமே இல்லை என்றோ, ம்ருக ராஜ்ய மென்றோ, ராக்ஷஸ ராஜ்யமென்றோ, அஸுர ராஜ்ய

மென்றே, கூறுதற்குரியதாகும். ராம ராஜ்யத்திற்கு, அதாவது ஸ்ரீராமன் நடத்திய உத்தமமான ராஜ்ய முறைக்கு இந்த லக்ஷணங்களைக் கூறியது ராமாயண மாத்திரமன்று; மற்ற வேதங்கள், தர்ம சாஸ்திரங்கள் முதலிய ஸர்வ ப்ராசீந நூல்களும் இப்படியே கூறியிருக்கின்றன.

## 5. இப்போது.

இப்போது நம் நாட்டின் நிலை எப்படி இருக்கிறது என்பதை நினைவில் வைத்துக் கொண்டால் தான், நாம் செய்ய வேண்டியது என்ன? என்பதைத் தீர்மானிக்க இயலும். ஆகையால் யாவருமறிந்த விஷயங்களே இங்கு எடுத்துரைக்கப் படுகின்றன.

1. மழை பெய்வதில்லை. பெய்யுமிடங்களிலும் மிகக் கொஞ்சமாகப் பெய்கின்றது. ஒன்றிரண்டு இடங்களில் அதிவ்ருஷ்டியாய்ப் பெருஞ் சேதம் விளைவிக்கின்றது.

2. பூமியில் பயிர் ஏறுவதில்லை. ஏறின பயிர் காய்ந்து விடுகிறது. வளரும் பயிரும் பூச்சிகளினால் நசிக்கின்றன. அதற்குத் தப்பின பயிரிலும் தான்யம் மிகக் குறைவு.

3. எங்கும் உணவுப் பஞ்சம். பசியினாலுண்டாகும் பயம் மனிதர்களைப் பிடித்து ஆட்டுகின்றது, வாட்டுகின்றது. பசியினால் லக்ஷம் லக்ஷமாக ஜனங்கள் மரித்தனர்.

4. திருட்டுப் பயத்திற்குத் எல்லையே யில்லை. வழி, ரயில், கடைத்தெரு, கோவில், உத்ஸவம், ஆபீஸ், பாங்கு, தபாலாபீஸ், வயல், வீடு, தோட்டம், கொட்டகை எங்கும் பலவிதமான திருட்டு நடக்கின்றது.

5. ஜனங்களின் மனதில் நிம்மதியே யில்லை. எப்பொழுதும் சிந்தை, கலக்கம், ஏக்கம், அச்சம், அவா, அருவருப்பு,



த்வேஷம் இவற்றில் ஏதோ ஒன்றோ பலவோ இருந்து கொண்டே இருக்கின்றது.

6. கலஹத்திற்கு ஒப்பே இல்லை. அதற்கு மாறாக வளர்ந்து கொண்டே இருக்கிறது. ஒரு ஜாதி மற்றொரு ஜாதி; ஒரு மதம் மற்றொரு மதம்; அரசாள்பவர் குடிகள்; முதலாளி தொழிலாளர்; ஒரு கக்ஷி மற்றொரு கக்ஷி; ஒரு பாஷை பேசுபவர் மற்ற பாஷை பேசுபவர்; ஒரு தேசத்தில் வஸிப்பவர் மற்றதேச வாஸிகள்; ஸ்திரீகள் புருஷர்கள் உபாத்யாயர்கள் மாணவர்கள், ஆஸ்திகர்கள் நாஸ்திகர்கள்; இப்படிப் பல பல பிளவுகள்.

7. கொலைகள் மலிந்து வருகின்றன. அல்ப காரணத்திற்காகப் படுகொலை செய்யத் துணிவு ஏற்பட்டிருக்கிறது.

8. புதிது புதிதாக வியாதிகள் உண்டாகின்றன. வியாதிகளால் ஜனங்கள் அநுபவிக்கும் அவதிக்கு அளவில்லை.

9. பாலர்களும் யுவர்களும் அகால மரணமடைவது கொஞ்ச நஞ்சமல்ல.

10. சிறுவர்கள் மரித்து அவர்களுடைய ஸமக்ரியைகளைப் பெரியோர் செய்வது அநேகமாக வழக்கமாகி விட்டது.

11. பல காரணங்களால் தற்கொலை செய்து கொள்வதும் அடிக்கடி நடக்கின்றது.

12. ஆழ்வார்களும் நாயன்மார்களும் தோன்றி, மெய்ஞா மனங்களால் வழிபட்ட பல மா பெருங் கோயில்களுடைய, வேதங்கள் உபநிஷத்துக்கள் வால்மீகி ராமாயணம் கம்ப ராமாயணம் பகவத்கீதை திருக்குறள் இவற்றைப் பெற்ற பெருமையுடைய, இக் நாட்டில் அச்சம் நாணம்

எதுவுமின்றித் தெய்வமே யில்லை என்று ஆரவாரித்து ப்ரசாரம் செய்யப் பலர் முன்வந்து விட்டனர். உலக நடைக்கும் இன்றியமையாதன வென்று போற்றி அநுஷ்டிக்கப்பட்ட தர்மங்களும் புராதன பழக்க வழக்கங்களும் அனேகமாய் மறைந்து விட்டன. கொஞ்ச நஞ்ச மிருப்பனவும் அதர்மமெனத் தூற்றப்படுகின்றன.

13. எவை தீங்கென விலக்கப்பட்டனவோ அவையே மிகுந்த ஆர்வத்துடன் ஆதரிக்கப்பட்டு வருகின்றன.

14. பலம், பொருள் இவற்றைப் பற்றியல்லது மனிதர்களுக்குப் பரஸ்பரம் கௌரவம் மரியாதை எல்லாம் போய் விட்டது.

இந்நிலை நீடித்தால் உலகத்தின் கதி என்னவாகுமென்று எண்ணும் போது அறிவாளிகள் நடு நடுங்கிப் போகாமல் இருக்க முடியாது. இது மாறவேண்டும்; அறவே ஒழிய வேண்டும். ராம ராஜ்ய நிலை ஏற்பட வேண்டும். புத்திமான்களுக்கு இவ் விஷயம் எளிதில் செவ்வனே விளங்குமாதலின் இதைப்பற்றி விவரித்துக் கூறவேண்டிய அவச்யமில்லை.

## 6. அரசன்.

நாட்டின், நாட்டிலுள்ள ப்ரஜைகளின், யோக க்ஷேமங்களைச் சரிவர நடத்த அரசன் ஒருவன் இருக்க வேண்டியது அவச்யமென்பது நமது வெகு காலத்திய ஸித்தாந்தம். ஒரு குடும்பஸ்தர் தனது குடும்ப கார்யங்களை ஆதரத்துடனும் ஆர்வத்துடனும் கவனித்து அவற்றின் சீர்மையால் ஸந்தோஷத்தையும், சீர்கேட்டால் வருத்தத்தையும் அடைவது போல அரசன் தனது குடிகளின் ஸுக ஜீவனத்தையே முக்ய நோக்கமாகக் கொண்டு அவர்களுக்கு வேண்டியதைச் செய்து அவர்களுக்கு வருத்த முண்டான போது தானும்



வருந்தியும் அவர்கள் ஸுகித்தபோது தானும் ஸுகித்தும் இருப்பன். ஸ்ரீராமன் இப்படி இருந்ததாக அயோத்திமா நகரில் வாழ்ந்த மஹா ஜனங்கள் தசரத சக்ரவர்த்தியினிடத்தில் அறிவித்தனர், என்று வால்மீகி முனிவர் கூறுகின்றார். தமது நாட்டில் அக்ரமம் ஒன்றும் நடைபெறாது எல்லாம் க்ரமமாய் நடந்து வருகின்றது என்னுமிவ்வித நிலையை உண்டாக்கிப் பெரும் மகிழ்ச்சி யுறுவர் மஹாத்மாக்களான அரசர்கள். கேகய தேசத்தை ஆண்டுவந்த அச்வபதி என்னுமோர் அரசன் தன்னிடத்தில் வந்த முனிவர்களைப் பார்த்து

"எனது நாட்டில் திருடனில்லை; லோபி இல்லை;
குடியனில்லை; வேள்விசெய்யாதவனில்லை;
கல்லாதவ னில்லை; துர்நடத்தை யுள்ளவனில்லை,
துர்நடத்தை யுள்ளவள் எப்படி யிருப்பாள்."

என்று கூறி "இவ்வித அரசாட்சி புரியுமவனாதலின் நான் அயோக்யனல்லேன். நான் கொடுப்பதை நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்" என்று விண்ணப்பித்துக் கொண்டதாகச் சாந்தோக்யோப நிஷத்துச் சொல்லுகிறது. இத்தகைய அரசர்கள் இருந்தவரை இப் பாரதநாடு மஹோந்நத தசையில் விளங்கிற்று. பிறகு கால க்ரமத்தில் சீர்கெட்டு இப்போதைய நிலைக்கு வந்திருக்கின்றது.

அரசர் காலம் கழிந்துவிட்டது. குடிமக்களே அரசாட்சியையும் நடத்த வேண்டும். இது மிகவும் கடினமான காரியம். நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் தமது பொறுப்பை உணர்ந்து அதன்படி நடக்கக் கூடிய அவ்வளவு விவேகத்தையும் குணச் சிறப்பையும் பெற வேண்டும். இது ஸாத்யமா என்று ஆராய்ந்தால் 'ஸாத்யமல்ல' என்றே பதில் கூற வேண்டியதாகத் தோன்றுகிறது. ஆனால் என்ன செய்வது? வேறு கதி ஏது? ஸ்வயம் அறிவும் ஆற்றலும் பெற்றவர்கள்

தம்மாலியன்றவரை ஸர்வ ஜனங்களும் நிலைமை உள்ளபடி உணருமாறும் அதற்குத் தக்கபடி நடத்தையைக் கைக்கொள்ளுமாறும் முயல வேண்டும். அரசன் ஒருவன் இருந்து ஆட்சி புரிவது உயர்ந்ததா? ஜநநாயக முறை உயர்ந்ததா? என்ற கேள்வி இப் பரத நாட்டின் பூர்வ காலத்தில் எழவே இல்லை. குல பரம்பரையாக ஸிம்மாஸநமேறி வீற்றிருந்த அரசர்களும் தமது குணத்தாலும் செய்கையாலும் உலகத்தை மகிழ்வித்ததின் நிமித்தமாக ஜநங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் போலவும் அவர்களில் ஒருவர் போலவுமே கருதப்பட்டன ராகையால் அவ்விதக் கேள்வி எழ ஸந்தர்ப்பமே யில்லாது போயிற்று. பிறகு எத்தனையோ காரணங்களால் அவ்வித அரசு சீர்குலைந்து போக, மேனாட்டாரின் சேர்க்கையால் ஜந நாயகமுறை இப்போது நம்மிடம் வந்திருக்கின்றது. இதை வெற்றிபெற நடத்த வேண்டியது நமக்குள் ஒவ்வொருவருடைய பொறுப்புமாகின்றது. இது செவ்வனே உணரப்பட வேண்டும். இதை ஒவ்வொரு ஸ்திரீயும் புருஷனும் உணர்வதற்கான காரியத்தை முதலில் செய்ய வேண்டும்.

## 7. ஜநாதிபதி.

ஜநநாயக முறையிலும் அதிபதியாக ஒருவர் இருந்து காரியங்களைக் கவனிக்க வேண்டி யிருக்கிறது. இதை ஒருவரும் நிவர்த்திக்க முடியாது. வம்ச பரம்பரையாக வரும் அரசர்கள் ஸ்திரமாய் இருப்பார்கள். அது போலன்றி ஜநாதிபதிகள் அவ்வப்போது வந்து போய்க் கொண்டிருப்பார்கள். இவ்வாறு மாறுதல் உண்டாயிருப்பினும் ஜநாதிபதிகளாயிருக்குமவர்களும் அரசர்கள் போலவே அறிவிலும் குணத்திலும் ஸாமர்த்தியத்திலும் சிறந்தவர்களாக இருக்க வேண்டும். இத்துடன்



1. முழு நாட்டின் நலமே நம்மிடத்தில் ஒப்படைக்கப் பட்டிருக்கிறதே. நாம் என்ன தவறு செய்து யாருக்கு என்ன தீங்கு ஸம்பவித்து விடுமோ என்று பயந்து நடுங்கிக் கொண்டிருக்க வேண்டும்.

2. ஜநாதிபதி என்ற ஸ்தானம் நாட்டின் ஸேவைக்காக ஏற்பட்டதே யன்றித் தம்முடைய மேன்மைக்கும் கௌரவத்திற்கும் ஏற்பட்டதன்று என்பதை ஒரு க்ஷணமும் மறக்காமலிருக்க வேண்டும்.

3. தம்முடைய மனத்திற்குள் த்வேஷம் என்பது ஒரு சிறிதும் இல்லையா என்று நன்றாய்ப் பரீக்ஷித்துப் பார்த்துக் கொள்ள வேண்டும். த்வேஷப் பான்மை கொஞ்சமாவது இருக்குமாகில் ஜநாதிபதி ஸ்தானத்திற்கு எவ்விதத்திலும் தகுதியற்றவராவர்.

4. தம்மைக் காட்டிலும் திறமை வாய்ந்து நாட்டிற்கு அதிக உபகாரத்தைச் செய்யக் கூடியவர்கள் இருப்பாராகில் அவர்களை ஜநாதிபதியாக்க முயல்வதன்றி தாம் அந்தப் பதவிக்கு ஆசைப்படக் கூடாது; போட்டியிடக் கூடாது.

5. தாம் ஒரு பதவியையோ காரியத்தையோ நிர்வஹிக்க ஒப்புக்கொண்ட பிறகு ‘தம்மால் அது நிர்வாஹம் செய்ய முடியாது. தமது சக்தியை மீறியுள்ளது அது’ என்றுணர்ந்தாராகில் உடனே தாம் விலகிக் கொள்ளத் தயாராயிருக்கும்படியான நேர்மையும் தைர்யமுமுள்ளவர்களாயிருக்க வேண்டும்.

6. நமது நாட்டில் குற்றமே யில்லாமலிருப்பவரும் நியாயமாய் நடப்பவரும் ஒருவித கஷ்டத்திற்கும் உள்ளாகக் கூடாதென்றும் குற்றம் செய்தவர் தண்டனையைப் பெறாது தப்பக் கூடாதென்றும் த்ருட ஸங்கல்பம் செய்து கொண்டு அந்நிலை உண்டாமாயின் ‘நமது சிறந்த முயற்சி பலித்தது’

என்று ஸந்தோஷப்பட்டும், அது உண்டாகவில்லையாயின் "சீச்சீ. எதற்காக நாம் இருப்பது" என்று அழுதும் தமது கடமையைச் செலுத்தத் தயங்காதவர்களா யிருக்க வேண்டும்.

7. இவ்வித உயர்ந்த குணங்களுக்கெல்லாம் ஒரு காரணமாயும் இவைகளுக்கெல்லாம் எவ்வளவோ மேல்பட்ட மிகச் சிறந்த குணமாயு மிருக்கிற பகவத் பக்தி யென்ற தனிச் சிறப்பும் பெற்றவர்களா யிருக்க வேண்டும். காலையில் படுக்கையை விட்டெழும் போது "பகவானே, நான் யார்? எனக்கு என்ன சக்தி யிருக்கிறது? நீயே எல்லாவற்றையும் சரிவர நடத்தியருள வேண்டும்" என்றும், ராத்திரி படுக்கப் போகும் போது "என்னப்பனே, என் புத்திக் கெட்டிய வரையில் நான் ஒரு தவறும் செய்யவில்லை. அறியாக் குற்றங்கள் இருக்குமாயின் அவற்றை நீ பொறுத்துக் கொள்ள வேண்டும்" என்றும் நெஞ்சுருகி வேண்டிக் கொள்ளும்படிப் பகவானிடத்தில் அவ்வளவு பற்றுதல் உடையவர்களா யிருக்க வேண்டும்.

மிக மிகச் சிறந்த, நாட்டின் தலைவராயிருக்கு மவர்களுக்கு இன்றியமையாத, இக்குணங்கள் பெற்ற ஒரு தலைவர் ஒரு நாட்டிற்குக் கிடைப்பாராயின் அந் நாட்டின் பாக்கியமே பாக்கியம்.

## 8. ஜநங்கள்.

ஜந நாயகத்தில் தகுந்த தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு ஜநங்களிடத்தில் இருக்கிறது. தேர்ந்தெடுக்கப் படும் தலைவர்கள் தகுந்தவர்களாக இல்லாவிடில் அரசாங்கம் சீர்கெட்டு நாடு முழுவதும் கஷ்டப்பட வேண்டியிருக்கும். ஆகையால் தீர ஆலோசித்துத் தமது பொறுப்பைச் செவ்வனே உணர்ந்து திறமையுள்ளவரும் குணசாலிகளுமான



தலைவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இவ் விஷயத்தில் இவர்கள் நடந்து கொள்ள வேண்டிய விதமாவது.—

1. ஜாதி இனம் இவற்றைப்பற்றித் தாக்ஷிண்யம் அல்லது வெறுப்பு கொள்ளக் கூடாது.

2. தமக்கு வாக்குக் கொடுப்பதற்காக ஒருவர் பணம் தருவாராயின் அதை விஷமாகக் கருதவேண்டும்.

3. சாதி இனப் பூசலைக் காட்டியோ பணம் கொடுத்தோ ஒரு பதவியைப் பெற ஆசைப்படுகிறவர் ஒரு நாளும் அப்பதவிக்கு உரியவரல்லர் என்று தீர்மானித்து அதற்குத் தக்கபடி நடக்க வேண்டும்.

4. தகுந்த தலைவர்களைத் தேர்ந்தெடுப்பது ஜநங்களுடைய கடமையாதலின் தாம் வாக்குக் கொடுத்ததற்காகத் தேர்ந்தெடுத்த தலைவர்களிடமிருந்து ஒரு ப்ரதி பலனையும் எதிர்பார்க்கக் கூடாது.

வாக்குரிமை யாவருக்கும் ஸமமானது. மிக்க படித்தவர், எழுதப் படிக்க மாத்திரம் கற்றவர்; பெரும் உத்யோகத்தில் இருப்பவர், குடியானவர்; என்றிப்படியுள்ள பேதங்களினால் வாக்குக்கு மதிப்பு நடவடிக்கையில் அதிகமாகவோ குறைந்ததாகவோ ஆகாது. இதன் உள் கருத்து என்னவெனில் வாக்குரிமை பெற்ற ஒவ்வொரு மனிதனும் ஸ்த்ரீயும் "இவர் தலைவர் பதவிக்குத் தகுதி பெற்றவர். இவரிடத்தில் அதிகாரமிருந்தால் எல்லாம் விரும்பத்தக்க முறையில் நடைபெறும்" என்று கூர்ந்து ஆராய்ந்து அறிவதற்குப் போதிய யோக்யதை பெற்றிருக்கின்றார்கள்—என்பது. ஆகவே வாக்காளர்களும் அலக்ஷ்யமாகவும் அவஸரப்பட்டும் முறை தவறியும் தமது வாக்கை உபயோகப்படுத்தாமல் தெய்வத்திற்குப் பயந்தும் நாட்டின் நலத்தைக் கருதியும்

மனச்சாக்ஷிக்கு விரோதமில்லாமல் தமது கடமையைச் செலுத்த வேண்டும்.

## 9. அறிவு.

பொதுவாக எல்லோரும், விசேஷமாகத் தலைவர்களும், எதற்காக அரசாங்கம் நடத்துவது? அதன் பயன் என்ன? என்பதை உள்ளபடி அறிய வேண்டும். இது நான்காவதான லக்ஷண ப்ரகரணத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. நல்ல அரசாட்சிக்கு லக்ஷணங்களாக அங்குக் கூறப்பட்ட அத்தனையும் அதன் முக்ய நோக்கங்கள். அவற்றின் பொருட்டே அரசாட்சி நடத்த வேண்டுவது. இதை இப்படி அறிவதே அரசாங்கம் நடத்துமவர்களுக்கு அவச்யம் வேண்டிய அறிவு. நோக்கங்களை உள்ளபடி யறியாவிட்டால் அவற்றுக் கேற்ற முயற்சிகள் நடைபெறா, எல்லாம் ஒரே குழப்பமாகும்.

சிறந்த அரசியலுக்கு இவையே முக்ய நோக்கங்கள் என்பதில் யாருக்கும் அபிப்ராய பேதம் இருக்காதென்றே தோன்றுகிறது. ஒருவர் இருவர் வேறு விதமாக எண்ணக் கூடியவர்கள் இருப்பார்களாயின் அவர்களும் ராமாயணம் முதலிய உயர்ந்த பழைய நூல்களில் கூறப்பட்டிருப்பதைப் பாமரித்துத் தமது மனஸ்ஸை சிக்ஷித்துக் கொள்ள வேண்டும். புத்தியை ஸாத்விகம், ராஜஸம், தாமஸம் என்று மூன்று விதமாகப் பிரித்து அவற்றின் லக்ஷணங்களைக் கூறப் புகுந்த பகவான்—

> இம்மை மறுமை இவற்றுக்குரிய ஸாதனங்களையும், தேச காலங்களுக்குத் தக்கபடி இது செய்யலாம் இது தகாதது என்பதையும், ஸம்ஸார பந்தம் வீடு இவற்றையும் உள்ளபடி அறியக் கூடியது ஸாத்விகம்.



> அவற்றை உள்ளபடி யறியாதது ராஜஸம்.
>
> அதர்மத்தை தர்மமென்றும் தர்மத்தை அதர்மமென்றும் இப்படியே மற்றும் எல்லாவற்றையும் விபரீதமாக உணர்வது தாமஸம்

என்று கூறியுள்ளார். இப்படி ராஜஸமாயும் தாமஸமாயுமிராமல் தமது புத்தி ஸாத்விகமாகவே இருக்கின்றதா என்பதைப் பொறுப்பு வாய்ந்த பதவியிலுள்ள ஜநாதிபதிகள் திரும்பத் திரும்பப் பாமரித்துப் பார்த்து ஸாத்விகத் தன்மை குறைவென்று தோன்றினால் அதைப் பூர்ணமாகப் பெறப் பெரு முயற்சி செய்ய வேண்டும். முயற்சி செய்தும் ஸாத்விக புத்தி உண்டாகாதென்று தோன்றினால் நாட்டு நலத்தைக் கருதிக் கௌரவமாகப் பதவியிலிருந்து விலக வேண்டும். பெருந் தீங்கை விளைவித்துப் பிறகு பங்கப்படுவதைக் காட்டிலும் தனது நிலையை உணர்ந்து முன்னமே தானே விலகுவது தனது மேன்மைக்கும் சிறப்புக்கும் ஹேதுவாகும். பகவான் ஸ்ருஷ்டித்த இவ்வுலகத்தில் புத்தியிலும் மற்ற விஷயத்திலும் எவ்வளவோ ஏற்றத் தாழ்வு இருக்கின்றது. இதை ஒருவரும் மாற்ற முடியாது. ஆயினும் எவரும் தமது ஸ்வரூபத்தை நன்றாய் அறிந்து, கபடமில்லாமல், இல்லாத சிறப்பை இருப்பதாகக் காட்ட முயலாமல், அதற்குத் தக்கவாறு நடப்பாராயின் அதுவே அவருக்கு மிகுந்த கௌரவத்தைத் தரும். இவர் யோக்யர் என்று யாவராலும் மதிக்கப் பெறுவர். எவ்விதப் பெருமை வாய்ந்தவராயினும் மனிதருடைய புத்தி சில ஸமயங்களில் தடுமாறுவது இயற்கை. ஆகையால் அவ்வப்போது அந்தந்த விஷயத்தைப்பற்றி உண்டாகும் அறிவு மெய்யறிவா? பொய்யறிவா? என்று தீர ஆராய்ந்து பார்க்க வேண்டும். ப்ரத்யக்ஷத்தாலும் அதன் மூலமான அநுமானத்தாலும் அடையப் பெற்ற அறிவு மெய்

யறிவா? பொய்யறிவா? என்பதைத் தாமே பரீக்ஷை செய்தும் பிறருடைய அறிவைக் கொண்டும் தீர்மானிக்கலாம். இவ்விரண்டு ப்ரமாணங்களுக்கும் நிலமல்லாத, சாஸ்திரங்களாலேயே அறியப்பட வேண்டிய, விஷயங்களில் சாஸ்திர முறையைப் பற்றியே நிச்சயம் செய்ய வேண்டும். சாஸ்திரம் ஒரு விதமாய்ச் சொன்ன விஷயத்தை நம் புத்தியைக் கொண்டு வேறு விதமாகத் தீர்மானம் செய்யுமவர்கள் ராம ராஜ்யத்தில் இடம் பெறுவது முடியாது. அவர்கள் ஹிந்து மதத்தையே சேர்ந்தவர்களல்லர். ஸ்ரீராமனுடைய பிதாவான தசரத சக்கரவர்த்தியின் பாட்டனார் ரகு மஹாராஜன். இவரைப்பற்றிப் பேசும் போது நம் தேசத்துக் கவிதிலகமான காளிதாஸன்

> “அவருக்குக் காதுவரை நீண்ட பெரிய கண்கள் இருந்தது வாஸ்தவம் தான். ஆனால் அவர் கண்ணுள்ளவரானது நுணுக்கமான விஷயங்களையும் அறிவிக்கும் சாஸ்திரத்தினால்.”

என்கிறார். பகவத்கீதை பதினாறுவது அத்யாயம் தைவ ஸ்வபாவமுள்ளவர்களுக்கும் அஸுர ஸ்வபாவமுள்ளவர்களுக்கும் பேதத்தைக் காட்ட வந்தது. அதன் முடிவில் ஸ்ரீ க்ருஷ்ணன்

> எவன் சாஸ்திரம் சொன்னதை விட்டுத் தன்னிஷ்டப்படி நடக்கிறானோ. அவனுக்கு ஸித்தியில்லை, ஸுகமில்லை, உத்தம கதி இல்லை : ஆகையால் உனக்குச் சாஸ்திரமே ‘இது செய்ய வேண்டியது : இது செய்யக் கூடாதது’ என்ற வ்யவஸ்தைக்கு ப்ரமாணம். சாஸ்திரத்தின் கட்டளை இன்னதென்று அறிந்து கடமையைச் செய்வாயாக.



என்று அர்ஜுனனைக் குறித்துச் சொன்னார். ‘சாஸ்திரத்தைப் புறக்கணித்து நடப்பவர்கள் அஸுரத் தன்மையினர்’ என்றார். சாஸ்திரம் காட்டிய வழியைப் புறக்கணித்து விட்டு “ஹிந்து மதம் எனப்படும் நம் மதத்தில் எனக்கு அபாரமான பற்றுதல்” என்று ஒருவர் சொல்வாராகில் இது வெறும் பேச்சு. நாட்டின் தலைவர் பதவியில் இருக்க விரும்பும் ஒவ்வொருவரும் ப்ரத்யக்ஷம், அநுமானம், சாஸ்திரம் இவை மூன்றுக்கும் விரோதமில்லாமல் நல்லறிவு பெற வேண்டும்.

## 10. உறுதி.

நல்லறிவு ஏற்பட்டு இது அவச்யம் செய்ய வேண்டிய கார்யமெனத் தீர்மானித்த பின் அதன்படி நடக்கத் தலைவர் உறுதி கொள்ள வேண்டும். ஒரு தீர்மானம் செய்து விட்டால் அதை அப்படியே நடத்தியே தீருவார் என்ற எண்ணம் ஜனங்களுக்கு உண்டானால் தான் அவர்கள் அவரிடத்தில் பயத்துடனும் மரியாதையுடனும் நடந்து கொள்வார்கள். “குற்றம் செய்தவர்களைத் தண்டித்தே ஆக வேண்டும் எனக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள் அரசாங்கத்தார். குற்றம் செய்தவர்கள் எவ்விதத்திலும் தண்டனைக்குத் தப்பிப் போக முடியாது” என்ற எண்ணம் உண்டாகாதாயின் பலர் பலவித கடோரச் செயல்களைச் செய்யத் தலைப்படுவார்கள். ஸாதுக்கள் பயப்படாமல் வாழ முடியாது. இப்படியே நாட்டின் நலத்திற்காகச் செய்ய வேண்டியதாக ஒரு காரியத்தைத் தீர்மானித்த பின் பின்வாங்காமல், தயங்காமல், அதைச் செய்து முடிக்கப் பெரும் ஊக்கம் கொள்ள வேண்டும். தலைவர் த்ருட ஸங்கல்பமுள்ளவர் என்று தெரிந்தால் தான் வேலைக்காரர்களும் கீழ் அதிகாரிகளும் தந்தம் வேலைகளைச் சுறுசுறுப்பாயும் சீக்கிரமாகவும் செய்து முடிப்பர்.

ஆனால் இவ்வுறுதி முன் ப்ரகரணத்தில் கூறப்பட்ட மெய்யறிவின் பயனாயிருக்க வேண்டும். 'செய்ய வேண்டியது இது, அதற்கு ஸாதநமிது, அதன் முடிவு இது, இதில் தவறு ஒன்றுமில்லை, நாம் தவறாக இதை உணர்ந்தோமில்லை' என்று ஐயம் திரிபற நிச்சயித்த பின் அதைச் செய்து முடிப்பதில் உறுதி கொள்ளல் வேண்டும். அப்படியாகில் தீங்கொன்றும் விளையாது. அப்படியன்றி ஆராய்ந்து பாராமல், அறிஞருடன் ஆலோசிக்காமல், தாமே சடக்கென ஒன்றைத் தீர்மானித்து யார் எது சொல்லியும் கேளாமல் அதைச் செய்தே முடித்து விடுவதென உறுதி கொண்டு அதன்படி நடந்தால் நாடு மிகுந்த ஸங்கடத்திற்குள்ளாகும். இது உறுதி எனப்படாது, மூர்க்கத்தனமென்றும் அசட்டுப் பிடிவாதமென்றும் இகழ்ந்து கூறப்படும்.

மேல் நாட்டில் ஒருவர் உலகத்தையே தன் அதிகாரத்தின் கீழ் கொண்டு வர வேண்டுமென்ற துராசை கொண்டு நவீந முறையில் மிகவும் பயங்கரமான பெரும் படைகளைத் திரட்டிக் கொடிய யுத்தம் செய்து லக்ஷக் கணக்கில் ஜநங்களையும் பல நாடுகளையும் நகரங்களையும் நாசமாக்கித் தானும் வெந்து சாம்பலானார். இப் பாரத நாட்டிலும் ஒருவர் தாம் எல்லோருக்கும் பெரியவராய், ஒருவருக்கும் கீழ்ப்பட்டவரல்லாதாராய் நாட்டையாளும் பதவியைப் பெற வேண்டுமென்ற துரபிமாநம் கொண்டு பல வருஷங்களாகத் த்வேஷ ப்ரசாரம் செய்து கலஹத்தை விளைவித்துப் பல லக்ஷ ஜநங்கள் மடிய நாட்டைத் துண்டாடிவிட்டுப் போய்விட்டார். நியாயமற்ற பிடிவாதம் நிமித்தமாக உண்டான இவ்விரண்டு ஸம்பவங்களாலேற்பட்ட பெருந் துன்பங்களிலிருந்து இன்னும் உலகும் நாமும் விடுபட்டோமில்லை. ஆகையால் புத்திசாலிகளான தலைவர்கள் பலபேர் ஆக்ஷேபிக்கக் கூடிய



விஷயங்களில் தமக்கு மட்டும் அவை உசிதமாகத் தோன்றிய போதிலும் சிறிதும் ஊக்கமும் உறுதியும் கொள்ளாது யாவரும் ஒப்புக் கொண்ட அவச்யமான காரியங்களில் மிகவுறுதி கொண்டு அவற்றை நிறைவேற்றி மக்களும் தாமும் ஸுகமாய் வாழும்படி செய்து பேரும் பெருமையும் பெறுவர்.

## 11. குற்றந் தவிர்த்தல்.

பொய், திருட்டு, ஹிம்ஸை, லஞ்சம், வஞ்சனை, பொறாமை, தெய்வ நிந்தை, பர நிந்தை இவை பெருங் குற்றங்கள். இவற்றை அறவே ஒழிக்க வேண்டும். இவையில்லாத மனிதர் வஸிக்கும் நாடு ஒன்று இருக்குமாகில் அதைக் காட்டிலும் உயர்ந்த நாடு எதுவும் இருக்க முடியாது.

இவற்றில் ஒவ்வொன்றும் பெருங் குற்றமென்பதிலும் நாட்டு ஜநங்கள் யாவரும் இக் குற்றங்களில் எதுவுமில்லாதவர்களாயிருக்க வேண்டுமென்பதிலும் யாருக்கும் அபிப்ராய பேதமில்லை. சாஸ்திரங்களும் இப்படியே கூறுகின்றன. இப்படி எங்கும் யாவராலும் ஒருமனதாய்க் குற்றமென்று கொள்ளப்பட்ட இவை மக்களிடத்தில் சிறிதும் இடம் பெறாமல் செய்ய ஒரு நாட்டின் தலைவர் ஆர்வங் கொண்டு அதற்கேற்ற முயற்சியைச் செய்வாராயின் அது மிகவும் மெச்சத் தக்கதாகும். ஆனால் அதற்கு வழி என்ன என்பது பெருங் கேள்வி. ஜநங்கள் இக் குற்றங்களைத் தவிர்த்து யோக்யர்களாக வாழும்படி செய்ய என்ன உபாயமென்று தெரிந்தாலல்லவோ அதில் முயற்சி செய்யக் கூடும்?

இப்போது எதற்கும் சட்டம் செய்ய முற்படுகிறார்கள். இது எவ்வளவு தூரம் பலனளிக்கிறது என்பது தெரிந்த விஷயம். உணவுப் பொருள்கள் விலை உயர்கின்றன. அரிசி பட்டணம் படி இரண்டு ரூபாய் வரையிலும் விற்றது. அதற்

காக ஒரு சட்டம் வருகிறது. இவ்வளவு விலைக்குத் தான் விற்கலாம் இதற்குமேல் விற்றால் தண்டனை யென்று விதிக்கிறார்கள். உடனே உயர்ந்த விலைக்காவது கிடைத்துக் கொண்டிருந்த அரிசி எங்கும் கடைகளில் மாயமாய் மறைந்து விடுகிறது. பிறகு ரஹஸ்யமாய் முன் விற்ற விலைக்கேயோ இன்னும் கொஞ்ச அதிக விலைக்கோ வேண்டிய அளவு கிடைக்கின்றது. சட்டத்தினால் ஏற்பட்ட பயன் என்ன?

திருடர்களுக்குத் தண்டனையை விதிக்கிற சட்டம் எத்தனை நாளாக இருந்து வருகிறது; திருட்டு நின்றதா?

லஞ்சம் வாங்கக் கூடாதென்று யாருக்குத் தெரியாது? ஆகிலும் எந்த ஆபீஸிலாவது அது கொடாமல் தமது அலுவலை முடித்துக் கொண்ட மக்கள் யாராவது உண்டா? ஆகையால் குற்றங்களைத் தடுப்பதற்குச் சட்டமென்பது வெகு மட்டமான உபாயம். சிறந்த உபாயம் முற்றிலும் வேறுபட்டது.

தண்டனை வரும் என்ற பயத்தினால் குற்றம் செய்யாமலிருப்பது என்ற நிலை ச்லாக்யமல்ல. "நாம் பொய் பேசக் கூடாது. திருடக்கூடாது. பிறர் மனம் வருந்தும்படி ஒன்றும் செய்யக் கூடாது. ஏன்? இதெல்லாம் மிகவும் இழிவான காரியம். மனிதராய்ப் பிறந்த நாம் கம்பீரமாய்க் கௌரவமாய் நியாயமாய் உலகில் வாழவேண்டும். தீய வழி பற்றிப் பிழைப்பதை விட மரிப்பதே மேல்" என்ற விவேகம் ஒவ்வொருவருக்கும் நன்றாய் ஸ்திரமாய் ஏற்பட வேண்டும். அதன் பயனாக இவ்விதக் குற்றங்களைக் கனவிலும் செய்யாமல் எக்குலத்தினராயினும் ஜனங்கள் ரிஷிகள்போல் அப்பழுக்கற்ற, பரிசுத்தமான, நடத்தை யுள்ளவர்களாய் விளங்கி ஜீவிக்க வேண்டும்.



பொய் திருட்டு முதலிய குற்றங்களைத் தீர்த்த பானமாகச் செய்பவர்களும் "இவை கொடிய குற்றங்கள். இவற்றைச் செய்யக் கூடாது" என்று நன்றாய் அறிவார்கள். ஆனால் இந்த அறிவு இருந்தும் இல்லாததுபோல் ஆகியிருக்கின்றது. மனித ஜந்மத்தின் சிறப்பு உள்ளபடி அவர்கள் புத்திக்குப் புலப்படவில்லை. அவர்களுக்கு அது நன்றாய்ப் புலனாகும்படி அறிவிக்கப் படவில்லை. இதற்குரிய சூழ்நிலையோ கல்வி முறையோ உபதேச மார்க்கமோ இப்போது எங்குமில்லை.

ஸ்வபாவத்தில் மனிதர்கள் எப்படியாவது பிழைக்க வேண்டுமென்று இதையே முக்கிய நோக்கமாகக் கொள்கிறார்கள். இதை யனுஸரித்து அவர்களுடைய கார்யா கார்யங்கள் நிர்ணயிக்கப் படுகின்றன. தேஹ ச்ரமமில்லாமலே வேண்டிய பொருள் கிட்டுமாயின் வேலை செய்யாமலே யிருக்கத் தூண்டும் சோம்பேறித் தனமும் அவர்களுக்கு இயற்கையாய் உண்டானது. ஆகையால் பொய் சொல்லியும் மோசம் செய்தும் திருடியும் பிழைக்க முற்படுகிறார்கள். இது மிருகத் தன்மை. எவ்வளவோ கஷ்டப்பட்டு வாங்கி வைத்திருக்கும் உணவுப் பொருள்களை நாம் ஏமாந்திருக்கும் ஸமயம் பார்த்துக் குரங்குகள் அபஹரித்துக் கொண்டு போய் விடுகின்றன. முக்கியமான பதார்த்தங்களை இவ்விதம் இழந்து பல தடவைகள் பரிதவித்த பாம ஏழைகள் மிகப் பலர். இவர்களுடைய சொல்லொணாத வருத்தம் சிறிதாவது குரங்குகளுக்குத் தெரியுமா? அவற்றின் வயிறே அவற்றிற்கு ப்ரதானம். மற்றவர் பட்டினி கிடந்தாலென்ன? பரிதவித்தாலென்ன? ப்ராணனையே விட்டால் தானென்ன? இதே நிலையில் தான் மோசக்காரர்களும் திருடர்களும் இருக்கின்றனர். ஸாதாரணமாய்க் குரங்குகள் ஆளைக் கொன்று அவன் பொருளை அபஹரிப்ப

தில்லை. திருடர்கள் அதையும் செய்கிறார்கள். ஆகவே இவர்கள் விலங்கு இனத்திற்கும் கீழ்ப்பட்டவர்கள் எனலாம். இத்தன்மையை மாற்றி மனிதத் தன்மைக்கு அவர்களைக் கொண்டுவர வேண்டியது அறிஞர்களின் பொறுப்பு; அரசாங்கத்தாரின் பொறுப்பு. பொருளிழந்தவர்களுக்கு எவ்வளவு வயிற்றெரிச்சல் இருக்குமோ அவ்வளவு வயிற்றெரிச்சல் நாட்டின் பாதுகாப்புக்காக ஏற்பட்ட அரசாங்கத்தை நடத்துவோருக்கும் ஸர்வஜந க்ஷேமத்தையே கருதி ஜீவிக்கும் ஸாதுக்களுக்கும் இருக்கும். ஆகையால் இவர்கள் முடிந்த எல்லா விதமான ஏற்பாடுகளையும் செய்து நாட்டிலுள்ள எவரும் மிருகத் தன்மையைப் பற்றாது மனிதத் தன்மையின் சிறப்பை உணர்ந்து அதிலேயே நிலைபெற்று வாழும்படி முயல வேண்டும்.

1. தக்க முறையில் எழுதப் பெற்ற பாடப் புத்தகங்களை வைத்தும் சிறந்த குணமும் அனுபவமுமுள்ள உபாத்தியாயர்களை நியமித்தும் பள்ளிக் கூடங்களில் படிக்கும் பொழுதே சிறுவர்களின் உள்ளத்தில் நன்று பதியுமாறு உண்மைப் பொருள்களைப் போதிக்க வேண்டும்.

2. வீடுகளிலும் தாய் தந்தை முதலிய பெரியோர்கள் சிறுவர்களை அவ்வப்போது சிக்ஷிக்க வேண்டும்.

3. ஒவ்வொரு கிராமத்திலும் நகரத்திலும் பொது இடங்களில் ஸர்வ ஜநங்களுக்கும் ஸௌகர்யமான காலத்தில் அடிக்கடி, கூடுமானால் தினந்தோறும், சிறுவர் பெரியோர் ஸ்திரீகள் புருஷர்கள் எல்லோரும் உணருமாறு சிறந்த முறையில் உபந்யாஸங்கள் நடக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

4. குற்றம் செய்தவர்களிடத்தில் பெரும் அவமதிப்புக் காட்டித் தீய வழியில் அவர்களுக்குள்ள உத்ஸாஹத்தைக் குறைக்கவேண்டும். இதற்கு நேர் மாறாகக் குற்றமொன்றும் செய்யாது நல்வழியில் நிற்போரை ஆதரித்துப் புகழ்ந்து பெருமைப் படுத்தவேண்டும்.



5. பலபேர் வேலை செய்யும் தொழிற் சாலை அரசாங்க ஆபீஸ்கள் முதலிய இடங்களிலும் மேலதிகாரிகளாயிருப்பவர்கள் அடிக்கடி வேலைக்காரர்களைக் கூட்டிப் பேசிக் கண்ணியமான முறையில் யாவரும் நடந்து கொள்ள வேண்டியதின் அவச்யத்தை எடுத்துக் காட்டவேண்டும்.

குற்றங்களைத் தவிர்ப்பதில் இதெல்லாம் சிறந்த உபாயம். இவ்வுபாயங்களைப் புத்திசாலித்தனமாய் ஊக்கத்துடன் கையாண்டு வந்தால் வெகு சீக்கிரத்திலேயே ஜநங்கள் யோக்கியராய் விடுவார்கள். நமது நாட்டில் பெரும் பான்மையோர் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் என்று பலர் வருந்துகின்றனர். முற்காலத்தில் எழுதப்படிக்கக் கற்பதைக் காட்டிலும் நன்மை தீமைகளைப் பெரியோர் வாயிலிருந்து கேட்டுத் தெரிந்து கொள்வதற்கே முக்யத்வம் கொடுக்கப் பட்டது. இப்போதும் இந்நிலை மாறவில்லை. எப்போதும் மாறவேண்டியதில்லையென்றே தோன்றுகிறது. எழுதப்படிக்கத் தெரியாத பலபேர் குடும்பத்தை நன்றாகக் காப்பாற்றி ஸௌக்கியமாக வாழ்கின்றார்கள். காதால் கேட்டே ஸூக்ஷ்ம விஷயங்களைத் தெரிந்துகொண்டவர்கள் அவர்கள்.

## 12. ஆரோக்யம்

108806

ஜநங்களுக்கு வியாதி வந்த பொழுது சிகித்ஸை செய்ய வைத்ய சாலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. எந்த அரசாங்கம் இதில் சிரத்தை காட்டியே வருகின்றது. ஆனால் இங்கும் வைத்யர்களும் தாதிகளும் பணம் கொடுப்போரிடத்தில் ஆதரவு காட்டியும் கொடுக்காதவர்களைக் கவனிக்

W
N49

காமலும் இராமல் லோகோபகாரம் தமது கடமை என்று உணர்ந்து வஞ்சனை யில்லாமல் ச்ரத்தையாய்க் கவனித்து ஜனங்களின் துன்பத்தைப் போக்க முயலவேண்டும்.

வந்த வியாதியைப் பரிஹரிக்க ஏற்பாடுகள் செய்வது போலவே வியாதி வாராமல் முன்னமே அதைத் தடுப்பதற்குரிய ஏற்பாடுகளையும் செய்கின்றனர். இது மிகவும் பாராட்டத் தக்கது. ஆனால் குடிக்கும் நீர்களில் உள்ள அசுத்தியையும் பூச்சிகளையும் போக்குவதற்காக அவற்றில் மருந்தைப் போடுவதும் ஜனங்களுக்கு ஊசி போடுவதும் போன்றவையே இவ்வேற்பாடுகள்.

குழந்தைகளுக்கு வயிற்றில் கட்டியும் பால்யத்திலேயே ஜனங்களுக்குக் கண் பார்வைக்குறைவும் இன்னும் இம்மாதிரி பல உபத்ரவங்களும் உண்டாகின்றன. இவற்றுக்கெல்லாம் காரணத்தைக் கண்டு பிடித்து ஜனங்களுக்கு அறிவித்து இவைகளைத் தடுக்கவேண்டும். ஒப்பிட்டுப் பார்த்தால் முன் காலத்தில் இவ்வளவு நோய்களும் நோயாளிகளும் இருந்ததில்லை என்றே தோன்றுகிறது. இது உண்மையாயின் முன்னிருந்த பழக்க வழக்கங்கள் இப்போதைய பழக்க வழக்கங்களை விடச் சிறந்தவை என்று கொள்ளத்தகும். அப்படியாகில் எல்லோரும் அவற்றையே மறுபடியும் கைக்கொள்ளும்படி போதிக்க வேண்டும். ஆஹாரவ்யவஸ்தை, ப்ரஹ்மசர்யம், அவரவர்களுக்குரிய வேலை, இவை தக்க முறையில் அநுஷ்டிக்கப்பட்டு வருமாகில் பல ஸங்கடங்களைத் தவிர்க்க இயலுமென்று தோன்றுகிறது.

## 13. அமானுஷம்.

நம்மால் முடிந்த சிகித்ஸைகளையும் தடுக்கும் முறைகளையும் இப்படி நாம் கையாளலாம். ஆகிலும் விஷக்கட்டி, விஷஜ்வரம், வாந்திபேதி, வசூரி என்றிப்படி உக்ரமான பல



கொடிய வியாதிகள் உண்டாகி எண்ண முடியாத ஜனங்களை மரணத்திற்குள்ளாக்குகின்றன.

ப்ரபலமான பூகம்பம் உண்டாகி உயிர்ச்சேதம் வரை பல கஷ்டங்கள் விளைகின்றன. மழை அதிகமாகப் பெய்து ஆறுகள் கரை புரண்டோடி ஏரிகள் உடைந்து மாடு மனிதர் வீடு நிலம் பயிர் எல்லாம் அடியோடு நாசமாகின்றன. நெருப்பினால் படும் அவதியையும் தினந்தோறும் கேட்கின்றோம். புயல் காற்றடித்து ஆங்காங்கு நேரும் துன்பங்களையும் நாம் செவ்வனே அறிவோம். ஐந்தாவது பூதமாகிய ஆகாசம் அசைவில்லாத அருவப் பொருளாதலின் அது தானாக ஒரு துன்பத்தையும் நமக்கு உண்டு பண்ணாது. விமானங்களில் பறந்து சென்று நாமாக விழுந்து மரிப்பது அதன் குற்றமென்ன வொண்ணாது. ப்ருதிவி முதல் நான்கு பூதங்களும் நமக்கு அல்லல்களை விளைவிக்கின்றன.

மழை பெய்யாது நாம் படும் கஷ்டத்திற்கு எல்லையேயில்லை.

“மழையினால் நாம் பிழைத்திருக்கிறோமாதலின் அதை அம்ருதமெனலாம்.

“மழையாகப் பெய்த நீரினால் தான்யம் உண்டாகின்றது. அரிசி நீரில் வெந்து அன்னமாகின்றது. இப்படி அன்னத்தை உண்டாக்குவது மழை.

“இதோடு நிற்பதில்லை மழையின் முக்கியத்வம். தான் ஆக்கிய அன்னத்தை மனிதர் அருந்தும்போது தானும் அருந்தப்படுதலால் உணவுமாகின்றது.

என்றிப்படி மழை உண்டானபோது அதனால் ஏற்படும் நலத்தைக் காட்டி அதன் பெருமையைக் கூறிய திருவள்ளுவர்

அஃது இல்லாதபோது உண்டாகும் கஷ்டங்களை மேல் விவரிக்கிறார்.—

> "மழையில்லா விட்டால் உலகத்தைப் பசி வாட்டும்" எவ்வாறெனில்

> "உழவர்கள் நிலங்களை உழமாட்டார்கள். எப்படித் தான்யம் விளையும்"

நிலத்தில் தான்யம் விளையா விட்டாலும் சேமித்து வைத்திருப்பவர்களிடத்திலிருந்து பெற்றுக் கொள்வோமே எனில்

> "மழைபெய்து விளைந்த தான்யத்தை யன்றோ அவர்கள் சேமித்து வைத்துச் செல்வவந்தர்களாவது. சேமித்து வைத்தது எத்தனைநாளிருக்கும்? அது செலவான பிறகு அவர்களும் ஏழைகள் தானே. பிறகு மழையில்லையாயின் அவர்களுக்குத் தான் தான்யமேது?"

காட்டிற்குச் சென்று காய், கனி, கிழங்கு, தானாக விளைந்த தான்யம் இவற்றைத் தின்று பிழைக்கலாமே எனில்

> "தொடர்ந்து நெடுங்காலம் மழை யில்லையாயின் தரையில் பசும் புல் கூட இருக்காது. மரமேது? காடேது? காயேது? கிழங்கேது?"

ஒருகாலும் வற்றாத ஸமுத்ரத்திலுள்ள மீன் முதலியவற்றைப் பிடித்துப் புசித்து ஜீவிக்க இயலாதோ வெனில்

> "மழை யில்லாவிடில் நெடுங்கடலும் தண்ணீர்மை குன்றும்."

என்று. உணவுப் பஞ்சத்தை நீக்கக் கருதிய நம் துரைத்தனத்தார் பணம் கொடுத்து நீர்ப் பாசனத்திற்காகக்



கிணறு வெட்டச் சொல்லுகிறார்கள். நதிகளில் அணை கட்டி வாய்க்கால் வெட்டி அதன் மூலம் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதிகளைச் செய்ய முயல்கின்றனர். நெடுநாள் மழையில்லா விட்டால் கிணறுகளிலும் நதிகளிலும் தான் நீர் எப்படியிருக்கும்? பூமிக்குள்ளிருக்கும் ஊற்றுகளே நாளடைவில் வற்றி விடுமே?

இக் கஷ்டங்களெல்லாம் மனித சக்தியைக் கடந்து நிற்கும் ஹேதுக்களாலுண்டாகுமவை. ஸ்ரீராமனது ராஜ்யத்தில் இக் கஷ்டங்களிருக்கவில்லை யென்கிறார் வால்மீகி முனிவர். அவ்வித ராஜ்யத்தை நாம் விரும்பினால் இக் கஷ்டங்களைத் தவிர்க்க வழி தேட வேண்டும். இதற்கு வழி உண்டா? நாம் அதைப் பின்பற்ற முடியுமா?

## 14. வேள்வி.

இப்போது நாம் நம்முடைய மதத்தின் அடிப்படையான விஷயத்தைப்பற்றிக் கவனிக்க வேண்டியதாயிருக்கிறது. வெகு முக்கியமான இவ்விஷயம் நெடுநாளாக அனேகமாய் யாவராலும் முற்றிலும் மறக்கப் பட்டிருக்கிறது. அம் மறதியின் பயனே பல வித சண்டைகளும் சச்சரவுகளும் சமூகச் சீர்திருத்தமென்று பேர் வைத்துச் செய்யும் விபரீதச் செயல்களும். புத்திமான்கள் ஆழ்ந்து அமைதியாய் ஆலோசித்துப் பார்க்க வேண்டும்.

ஸ்ரீராமன் ஆண்ட காலத்தில் ஒரு தீங்குமின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து நீங்காத செல்வம் நிறைந்திருந்தது என்று ஸ்ரீ வால்மீகி முனிவர் சொன்னதைக் கேட்டோம். இப்படி ஒரு கஷ்டமுமிராமல் ஸர்வக்ஷேம முண்டாம்படி ராமன் என்ன செய்தார்? அவர் காட்டிய வழி ஏதாவது தெரிகின்றதா? என்று பார்க்குங்கால் ஸ்ரீ வால்மீகி

முனிவரே அதையும் கூறியிருக்கின்றார். முதலில் ஸங்க்ஷேப ராமாயணத்தில்

"வெகு தங்க நாணயம் செலவிட்டு நூற்றுக்
கணக்கான அச்வமேத யாகங்களைச் செய்து"

என்றும் பிறகு பட்டாபிஷேக ஸர்க்கத்தில்

"தோழர் இனத்தார் பந்துக்கள் எல்லாருடனும்
கூடி பலவித வேள்விகளைச் செய்தார்."

என்றும் கூறியிருக்கின்றார். இதன் உட்கருத்தை உள்ளபடி உணரவேண்டும். உலகத்தைக் காப்பாற்றுவது யக்ஞமே தான். மும்மூர்த்திகளுள் ரக்ஷணத்திற்காக ஏற்பட்ட மூர்த்தி விஷ்ணு. வேதமெங்கும் "யக்ஞம் விஷ்ணுவே" என்று கூறப்பட்டுள்ளது. வேள்வி யின்றி உலகம் வழங்காதென்றதாயிற்று. காத்தற் கடவுளான விஷ்ணு வேள்வி ஸ்வரூபனாயிருந்து காக்கிறான். வேள்வி யில்லாதபோது அவனுமில்லை. யார் காப்பது?

ஸ்ரீராமன் பல யக்ஞங்களைச் செய்தார். அதிலும் அச்வமேதத்தைப் பல நூறு தடவை செய்தார். பசு மந்தையில் ரிஷபம் எப்படியோ அப்படியே யக்ஞங்களில் அச்வமேதமென்கிறது வேதம். மேலும் வேதம் கூறுகின்றது—

"இந்த யக்ஞத்தை எங்கு செய்கிறார்களோ அங்கு
எல்லாம் ஓங்கி வளரும்.
எல்லாம் பலனைத் தரும்.
எல்லாம் செழிப்பா யிருக்கும்.
எல்லாம் ஸாரமுள்ளதா யிருக்கும்.
எல்லாம் ஸ்திரமா யிருக்கும்.
எல்லாம் தன் நிலையில் நிற்கும்.
எல்லாம் (மேல் மேல்) நிலை பெற்றிருக்கும்.



எல்லாம் சக்தி வாய்ந்ததா யிருக்கும்.
ப்ராம்மணர் ப்ரம்மவர்சசஸமுள்ளவராயிருப்பர்.
க்ஷத்ரியர் வெகு வீர்யமுள்ளவரா யிருப்பர்.
மனிதர்கள் தீர்க்காயுஸ்ஸுக்களா யிருப்பர்.
ப்ரஜைகளின் யோக க்ஷேமம் செவ்வனே நடக்கும்."

இன்னும் இந்த வேள்வியில் மந்திரமோதிச் செய்யும் ப்ரார்த்தனையாவது—

"ப்ராம்மணர் ப்ரம்மவர்ச்சஸமுள்ளவரா யிருக்க வேண்டும்.
இந் நாட்டில் அரசர் அம்பு போடுவதில் நிபுணராயும்
சூராயும் மஹாரத* ராயும் இருக்க வேண்டும்.
பசு கறக்க வேண்டும்.
எருது இழுக்க வேண்டும்.
குதிரை வேகமுள்ளதா யிருக்க வேண்டும்.
ஸ்த்ரீ ரூபவதியா யிருக்க வேண்டும்.
ரதமேறியவன் ஜயித்தே வரவேண்டும்.
யுவ புருஷன் ஸபைக்கேற்றவனா யிருக்க வேண்டும்.
இந்த யஜமானருக்குத் தகுந்த புத்திரன் உண்டாக
வேண்டும்.
வேண்டும் போதெல்லாம் எங்களுக்கு மழை
பெய்ய வேண்டும்.
பயிர்கள் எங்களுக்குப் பூர்ண பலமாக விளைய
வேண்டும்.
எங்களுடைய யோக க்ஷேமம் செவ்வனே
நடக்க வேண்டும்."

---

* ரதத்திலிருந்து யுத்தம் செய்யும் போது தன்னையும் ஸாரதியையும் குதிரைகளையும் எதிரியின் அம்பு படாமல் காப்பாற்றும் திறமை வாய்ந்தவர் மஹாரதர்.

பக்தி ச்ரத்தையுடன் செய்யப்பட்ட இக் கோரிக்கைகளை யக்ஞ நாராயண மூர்த்தி உவந்து அருளினன். இப்போது அச்வமேத யாகம் நடப்பதில்லை யாயினும் இப்ரார்த்தனைகளின் முக்கியத்வத்தைக் கருதி ச்ராத்தங்களில் போஜநம் செய்யும் ப்ராமணர்களின் முகமாக இவை செய்யப்பட்டு வருகின்றன. அச்வமேதம் போல் அவ்வளவு பெருமை வாய்ந்தவை யல்லவாயினும் மற்ற யக்ஞங்களுக்கும் இப் பலன்களெல்லா முண்டு. நமது சரீரத்தில் நாபிஸ்தானம் மிகவும் முக்கியமானது. அங்கிருந்து தான் ஸர்வ நாடிகளும் உடலில் வியாபித்திருக்கின்றன என்று யோக சாஸ்திரங் கற்றவர் கூறுவர். சக்கரத்தின் குடமும் நாபி எனப்படுகின்றது. ஆரைக் கால்களும் அவற்றைச் சுற்றியிருக்கிற வட்டை எனப்படும் நேமியும் குடத்தையே பற்றி நிற்பவை. யக்ஞம் உலகத்திற்கு நாபி என்கிறது ஒரு வேத வாக்யம்.

இவ்வித யக்ஞங்களைச் செய்து ஸ்ரீராமன் தனது ராஜ்யத்தில் எவ்விதத் தீங்கும் வாாமல் பாதுகாத்தார் என்றதாயிற்று. ஸ்ரீராமன் போலவே மற்றவர்களும் தந்தமக்குரிய கடமைகளைச் செய்து வந்தனராதலின் உலகம் க்ஷேமப்பட்டு வந்தது என்று கருதுகிறார் ஸ்ரீ வால்மீகி முனிவர்.

## 15. பகவத்கீதை.

ஸமயத்தில் புத்தி கலக்கமுற்று யுத்தம் செய்ய மாட்டேனென்று உட்கார்ந்துவிட்ட அர்ஜுனனைத் தேற்றப் புகுந்த பகவான் ஆச்சரியமான ஆத்ம ஸ்வரூபத்தை உபதேசித்து இந்திரியங்களை அடக்கி யோகாப்யாஸம் செய்து அவ்வாத்ம ஸ்வரூபத்தைக் காண வேண்டுமென்று ஸூசனை செய்தார். உடனே அர்ஜுனன் "ஆத்ம ஸ்வரூபத்தைக் காண்பதற்கு உபாயமான யோகாப்யாஸமே செய்கிறேனே. யுத்தம் செய்து ராஜ்யம் பெற்று யக்ஞதானாதி கர்மங்களை எதற்குச் செய்வது" என்று கேட்க அவனிடத்திலுள்ள அன்பினால், அறிஞருக்கும் அறிய வியலாததும் வேதங்களின் பரம நுட்பப் பொருள்களில் ஒன்றுமான கர்ம யோகத்தை உபதேசித்தார்.

> யக்ஞம் தானம் தபஸ்ஸு இவற்றை விடவே கூடாது. இவற்றால் தான் அறிவுள்ளவர்கள் பரிசுத்தராவது.
>
> ஆனால் இவற்றைச் செய்யும் போது பலன் ஒன்றையும் விரும்பக் கூடாது. நான் செய்கிறேன் என்ற அஹங்காரம் கூடாது. இவற்றைத் தவிர்த்து 'எனது கடமையானபடியால் நான் இதைச் செய்கிறேன். பகவான் கொடுத்த சக்தியைக் கொண்டு அவன் ப்ரீதிக்காகச் செய்கிறேன்' என்று செய்ய வேண்டும்.

என்பது அந்த உபதேசத்தின் ஸாரம். தனக்கு ஒரு பலனும் வேண்டாமல் எதற்காக யக்ஞாதிகளைச் செய்வது என்ற கேள்வி பிறப்பது இயற்கை. இங்குப் பகவான் கூறுவது—

> "யக்ஞத்தினால் மனிதர் தேவர்களைக் களிப்பிக்க வேண்டும். அத்தேவர்கள் மனிதர்களுக்கு வேண்டியதைத் தருவார்கள்"
>
> "இவ்வாறு பரஸ்பரம் உதவி பெரும் பேற்றைப் பெறுக."

என்பது. இந்த ஸூக்ஷ்மார்த்தத்தை ஸர்வ ஜநங்களு மறியும்படி போதிக்கக் கருதிய காளிதாஸ மஹா கவி ஸ்ரீ ராம

னுடைய பாட்டனாருக்குப் பாட்டனாரான திலீப மஹாராஜனைப் பற்றிப் பேசும் போது

யக்ஞத்திற்காக அவர் பூமியைக் கறந்தார்
பயிர்களுக்காக இந்திரன் ஆகாயத்தைக் கறந்தான்
இருவரும் தமது செல்வத்தை மாற்றிக் கொண்டு
இரு உலகங்களைக் காப்பாற்றினார்கள்.

என்கிறார்.

ஜீவன்கள் அன்னத்திலிருந்து உண்டாகின்றன
அன்னம் மழையிலிருந்து உண்டாகின்றது
மழை யக்ஞத்திலிருந்து உண்டாகின்றது
யக்ஞம் கர்மத்திலிருந்து உண்டாகின்றது
கர்மம் ஜீவன்களான நம்மிடத்திலிருந்து உண்டாகின்றது

என்றிப்படி ஒரு சக்கரம் சுழல்கின்றது. இச் சக்கரம் சுழல்வதற்குரியனவற்றைச் செய்யாது எவன் இருப்பானோ அவன் பிழைத்திருப்பதே பெரும் பாவம். சிற்றின்பத்தையே பற்றி நிற்குமிவன் வீணே உயிருடன் இருக்கிறான்.

என்று சீறுகிறார் பகவான்.

## 16. திருக்குறள்.

வேதங்களின் ஆழ் பொருள்களைச் சிலரே யறிவர். அவற்றில் ஒன்றான யக்ஞத்தைப் பற்றிய ரஹஸ்யத்தைக் கண்ணன் அர்ஜுனனுக்கு உபதேசித்தார். அது வடமொழியிலிருக்கின்றது. தென்மொழியே கற்றோரும் உணரும்படித் தெய்வப் புலமை வாய்ந்த திருவள்ளுவர் அந்த ரஹஸ்யார்த்தத்தை எல்லாம் உள்ளடக்கி இவ்வரிய நூலை இயற்றி உலகுக்குப் பேருதவி புரிந்திருக்கின்றார். வேதத்திற்கும் இதற்கும் பாஷை வேறாயினும் பொருளொன்றே என்பது



செய்யா மொழிக்குந் திருவள்ளுவர் மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே.

என்ற வெள்ளி வீதியார் பாட்டினால் ஸ்பஷ்டம். இதில் பாயிரமாய் அமைந்திருக்கின்ற முதல் நான்கு பதிகங்களின் கருத்துப் பொருளை ஊன்றிப் பார்க்க வேண்டும். முதலில் மங்களார்த்தமாக ஸர்வ காரணமான பகவானைப் பற்றிப் பேசினார். அடுத்தபடி, இரண்டாவதாக, அவன் ப்ரத்யக்ஷமாய் நமக்குச் செய்யும் அநுக்ரஹமான மழையைப் பற்றிப் பேசினார். நீலமேக ச்யாமளன் பகவான். மழை பெய்யும் நீல மேகமும் பகவான் தான். அவனது கருணை போன்றது மழை. இப்படிப் பகவான் மழை பெய்யும்படி செய்யும் அநுக்ரஹத்திற்கு ப்ரதான காரணமாயிருப்பவர் எவரோ அவரைப்பற்றி மூன்றாவதாகப் பேசுகின்றார் 'நீத்தார் பெருமை' யில். ஒழுக்கத்து நீத்தார்—யக்ஞாதி கர்மங்களைச் செய்து கொண்டு அதில் பலனை உத்தேசிக்காமலும் நான் செய்கிறேன் எனக்காகச் செய்கிறேன் என்கிற கர்த்ருத்வ மமதா புத்தியில்லாமலு மிருப்பவர். பகவத்கீதையில் சொன்ன நிஷ்காம கர்மயோகிகள் இவர்கள். துறவறம் பூண்டவர்கள் அதாவது ஸந்ந்யாஸாச்ரமத்தி லிருப்பவர்களல்லர். விசேஷித்து அவர்களைப் பற்றிய விஷயம் இல்லறவியலுக்குப் பிறகு துறவறவியலில் பேசப்படுகின்றது. பகவானுடைய அருள் பெறுவதற்காக இவர்கள் செய்வது எதுவோ அது அறம். அதைப்பற்றி அடுத்த பதிகத்தில் அதாவது 'அறன் வலியுறுத்தலில்' பேசுகின்றார்.

“ சில மஹாத்மாக்கள் சிறு பயன்களைச் சிறிதும் கருதாது பகவான் உகக்க வேண்டுமென்றும் உலகம் வாழ வேண்டுமென்றும் எண்ணித் தமது தர்மங்களைச் சரிவர நடத்த அதனால் மகிழ்வுற்ற பகவான் மழை பெய்யும்படி

அருளி உலகத்தைக் காக்கிறன்." என்பது இந் நான்கு பதிகங்களின் திரண்ட பொருள். இது காரணமாக மற்ற ஜனங்களுக்கும் அறம் பொருள் இன்பம் உண்டாம் என்பது முழு நூலின் உட்கருத்து.

## 17. திருப்பாவை.

தூர்புத்தி தூர்குணம் ஒன்றுமில்லாமல் மனோவாக்காயங்களைப் பரிசுத்தமாக வைத்துக் கொண்டு எவரும் தம் தம் பிறப்பு, நிலை, இவற்றுக் கேற்றவற்றைச் செய்து வருவாரின் அதுவே வேள்வி. அதனாலேயே பகவானுக்கு ப்ரீதி. அதுவே லோகோபகாரம். அதுவே ஆத்மோபகாரம். செய்ய வேண்டியதைச் செய்யாமலிருப்பதும் செய்யக் கூடாததைச் செய்வதும் ஒருவர் செய்ய வேண்டியதை மற்றொருவர் செய்வதும் தவறு. இதனால் தனக்கும் பாபம்; லோகத்திற்கும் தீங்கு; பகவானுக்கும் சீற்றம். ஸ்த்ரீ புருஷர் சிறியவர் பெரியோர் ப்ராம்மணர் க்ஷத்ரியர் அல்லாதார் என்ற இவை முதலிய பேதம் அவரவர் செய்ய வேண்டிய கார்யங்களின் வ்யவஸ்தைக்கு மாத்திரம் காரணமாகும். வ்யவஸ்தையாய் அவரவர் செய்யும் காரியத்தால் பகவானுக்கு ப்ரீதி உண்டாகின்றது, நமக்கும் லோகத்திற்கும் நலமுண்டாகின்றது, என்பதில் பேதமில்லை. திருப்பாவை என்னும் தனது அழகிய ப்ரபந்தத்தில்

ஓங்கி யுலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரிபெய்து
ஓங்கும் பெருஞ்செந்நெ லூடு கயலுகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி



வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்.

என்கிறள் ஒரு கோப குமாரி வேஷம் கொண்ட ஸ்ரீ ஆண்டாள். அறிவொன்றுமில்லாத ஆய்குலத் துதித்த நாங்கள் எங்களுக்குரிய நோன்பை அநுஷ்டித்தால் உலகம் முழுதும் வாழுமென்ற தாயிற்று. வஸிஷ்டர் முதலானோர் அவர்களுக்குரியதைச் செய்கின்றார்கள். நாங்கள் எங்கள் நிலைக்குரியதைச் செய்கிறோம். இரு சாராரும் பகவானுடைய கட்டளைப்படி நடப்பவர்கள். ஆகையால் பலனில் பேதமில்லையென்று வெகு ஸூக்ஷ்மமான சாஸ்திரப் பொருள் இதில் அடங்கி யிருக்கின்றது. "என்னுடைய ப்ரஜைகள் பூர்ணயுஸ்ஸூக்களாய் பயமற்றவர்களாய் ஈதிபாதை யற்றவர்களாய் இருப்பதற்குக் காரணம் தேவரீருடைய ப்ரம்ம தேஜஸ்ஸுதான்" என்று திலீப மஹா ராஜன் மூகமாக காளிதாஸ மஹாகவி வஸிஷ்டர் விஷயத்தில் சொன்னதையே தான் இங்கு ஸ்ரீ ஆண்டாள் கோப குமாரிகள் விஷயத்தில் அவர்களில் ஒருவள் மூகமாகச் சொல்லியிருக்கிறளென்பது வெளிப்படை.

## 18. ஆத்ம சக்தி.

இப்படித் தமது நிலையை யறிந்து அதற்குரிய தமது கடமைகளை ஒழுங்காகச் செய்யு மவர்களுக்குத் தனித்த ஒரு சிறப்பு உண்டு. அதாவது அவர்களுடைய ஆத்மாவுக்கு விசேஷ சக்தி ஒன்று உண்டாகின்றது. அதன் குணமென்ன வெனில் அவர்கள் இருக்குமிடத்தில் தானகவே ஜனங்களுக்கு நிம்மதியும் சாந்தியும் நிரம்பி நிற்கும். த்வேஷ பாவமே தலை காட்டாது. ஸூபிக்ஷம் பூர்ணமாயிருக்கும். இப்படி உத்தம புருஷர்கள் தமது செய்கையாலே யன்றி

வெறும் இருப்பினாலேயே உலகத்தின் க்ஷேமத்திற்குக் காரணமாகின்றார்கள். "நந்தினி யென்னும் பசுவைப் பாது காத்து மேய்ப்பதற்காக

> திலீப மஹா ராஜன் வநத்தில் புகும்போது மழை யில்லாமலே காட்டுத் தீ தணிந்தது. புஷ்பங் களும் பழங்களும் விசேஷித்து விருத்தி யடைந் தன. ப்ராணிகளில் பலமுள்ளது துர்பலமான தைப் பீடிக்கவில்லை."

என்கிறார் காளிதாஸ மஹாகவி. இந்த ஆத்ம சக்தி எவ் வளவுக் கெவ்வளவு அதிகமாக இருக்கின்றதோ அவ்வளவுக் கவ்வளவு அரசாயிருக்க, அதாவது ஜநங்களின் அதிபதியா யிருக்க, யோக்யதை பெறப்படுமென்பது கருத்து.

## 19. மத ஸாரம்.

"பகவான் ஒருவன் இருக்கிறான். சாஸ்திரம் அவனை யும் அவனது கட்டளைகளையும் நமக்கு உபதேசம் செய்கின் றது. நாமெல்லோரும் அவனது அடியார்கள். அவன் கட்டளைகளை மீறி நடவாமலிருப்பது நமது கடமை. மீறி நடந்தால் எல்லாவித கஷ்டமும் வரும். மீறாமல் அவற்றை அநுஸரித்தே நடந்தால் எல்லாவித நன்மையு முண்டாம்" என்றவிது நம்முடைய மத உண்மையின் ஸாராம்சம்.

"அவரவர்களுடைய ஸொந்த அபிப்பிராயத்தின்படி மதமொன்று இருக்கலாம் அல்லது இராமலும் போகலாம். அதற்கும் அரசாங்கத்திற்கும் யாதொரு ஸம்பந்தமுமில்லை. அரசாங்கத்திற்கும் மற்ற ஸமூஹ நன்மைகளுக்கும் விருத்தமா யிருந்தால் மத ஸம்பந்தமான விஷயங்கள் மாற்றிக் கொள்ளப் பட வேண்டும்" என்றிப்படிச் சொல்லக் கூடியவர்கள் நமது மதத்தின் தத்துவத்தில் சிறிதும் ப்ரவேசமில்லாதவர்கள்.



உலக நடையில் மூழ்கித் தோன்றியதை யெல்லாம் செய்து விட்டு ஒழிந்த போது ஒருவாறு காலங் கடத்தவோ, வேடிக் கையாய்ப் பேசவோ, கண்மூடித்தனமாய் வெகு காலப் பழக்க மாகையால் இது அநுஷ்டிக்கப்பட வேண்டுமென்ப தற்காகவோ ஏற்பட்டதன்று நம்முடைய மதம். இங்கு தான் நமது மதத்தின் தனிச் சிறப்பு விளங்குகின்றது. இவ்வுலக நடை செவ்வனே இயங்குவதே நம் மதத்தின் முதல் நோக்கம். மறுமையை மாத்திரம் கருதி அதற்கு மாத்திர மேற்றபடி நடந்தால் போது மென்றிருப்பவர்களும் தமது பிறப்பிற்கும் நிலைக்குமுரிய கருமங்களை விடக் கூடாது, அநுஷ்டித்தே தீரவேண்டு மென்கிறது சாஸ்திரம். மத ஸம் பந்தமாக எந்தச் சடங்குகளைச் செய்தாலும் அவையெல்லாம் உலகத்தின் நலத்திற்கே யாகும். அவை உள்ளபடி அநுஷ் டிக்கப் படாவிட்டால் உலகத்தில் அதர்மம் மேலோங்கி நிற்கும். ஸகலவித கஷ்டங்களும் உண்டாகுமென்பது சாஸ் திரங்களும் அவற்றைக் கற்றவர்களும் கொண்ட அசைக்க முடியாத தீர்மானம். மதச் சடங்குகள் இப்பொழுது அநேகமாய்க் கைவிடப்பட்டன. இது ப்ரத்யக்ஷம். ஜநங்கள் சொல்ல வொண்ணாத பல கஷ்டங்களை அநுபவிக்கிறார்கள். இதுவும் ப்ரத்யக்ஷம். மத ஸம்பந்தமான கருமங்கள் நடந்து வந்த முன் காலத்தில் இவ்வளவு கஷ்டமிருக்கவில்லை என் பதையும் அறிகின்றோம். "நமது சாஸ்திரங்கள் சொல்வது உண்மை. நாம் மூட நம்பிக்கையால் இவற்றைச் செய்யுமவர் களல்லோம்" என்பதை நிரூபிக்க இதைக் காட்டிலும் வேறு என்ன ப்ரமாணம் வேண்டும்?

இப்படி உலக நன்மைக்காகவே ஏற்பட்ட தர்மங்கள் எவ்வித இடையூறுமின்றி நடைபெறும்படி செய்வது, அவற் றுக்குரிய பாதுகாப்பளிப்பது, அரசாங்கத்தின் முக்கிய

நோக்கம். சாஸ்திரங்களில் சொன்ன தர்மங்கள் அனுஷ்டிக்கப் படுவதற்காக ப்ரஜைகளுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதன்றித் தர்மங்கள் இவை, அதர்மங்கள் இவை, என்று தானே நிர்ணயிக்கப் புகுமாகில் அது ஹிந்து அரசாங்கமல்ல. அதை நடத்துபவர்களும் ஹிந்துக்களல்ல. சாஸ்திர ரீதியில் இவர்கள் மதத்திற்கு மட்டுமல்ல நாட்டிற்கே, உலகத்திற்கே, மஹா த்ரோஹிகளாகின்றனர். பிற நாட்டாரைப் பார்த்து நாம் நம்மைத் தற்கொலை செய்து கொள்ளுகிறோமே என்று இவர்கள் உணராதது மிகவும் வியஸனிக்கத் தக்கது.

ப்ரௌடையான பிறகு செய்யும் விவாஹத்தினால் பிறந்த பிள்ளை யக்ஞாதிகளைச் செய்யப் பூர்ணத் தகுதி யற்றவனென்பது சாஸ்திரங்களின் கருத்து. இப்படிச் சட்டம் செய்யப் புகுந்தவர்கள் லோகக்ஷேமத்திற்காக நமது மதத்தின் மூலாதாரமான வேதம் உபதேசிக்கும் தர்மம் லுப்தமாய்விடுமே என்ற எண்ணமே இல்லாதவர்கள். விவாஹத்தின்போது ஸ்த்ரீகளுக்குக் கோத்திரம் ஏற்படுகிறது. ஒரு தரம் ஏற்பட்ட கோத்திரம் பிறகு மாறுகிறது என்பதற்குச் சாஸ்திரங்களில் ஆதாரம் சிறிதுமில்லை. இப்படியிருக்க விவாஹத்தும் புநர் விவாஹமும் விதவா விவாஹமும் நடந்தால் என்ன கோத்திரம் அவர்களுக்கு? யார் க்ருத்யம் செய்கிறது? என்று வரும் கோளாறுகளைப் பொருள் படுத்தாமலே சட்டமியற்றுகின்றனர். ச்ராத்தங்களும் பித்ரு தேவதைகளின் த்ருப்தி மூலமாக உலக க்ஷேமத்திற்காகவே ஏற்பட்டவை.

தெய்வத்தையே ஒப்புக் கொள்ளாதவர்கள் ஸர்வநாஸ்திகர்கள். தெய்வத்தை ஒப்புக் கொண்டு கர்மங்களை நம்பாதவர் கர்ம நாஸ்திகர். இருவகையினரும் தர்மத்ரோஹிகள். அதனால் ஸர்வத்ரோஹிகள். இப்படி இருந்து கொண்டு நாம்



நடத்தும் ராஜ்யம் ராமராஜ்யமாவதற்கு ஏதாவது இடமுண்டா என்பதைப் புத்திமான்கள் ஆர அமர ஆலோசிக்க வேண்டும்.

“யாவரும் தர்மத்தையே ப்ரதானமாகக் கொண்டனர்.”

என்கிற ராமராஜ்ய லக்ஷணத்தின் முக்கியத்வத்தைச் செவ்வையாய் உணரவேண்டும். தர்மம் என்ற சொல்லுக்கு “உலகத்தைத் தாங்குவது” “அது இருக்கவேண்டிய நிலையில் நிறுத்திக் காப்பது” என்று ஒரு பொருள். “ஸுகத்தைக் கொடுப்பது” என்று மற்றொரு பொருள். இரண்டையும் சேர்த்து நம்மை அழியாமல் பாதுகாத்து ஸுகப்படுத்துவது தர்மம் எனலாம். ஆகவே ராமராஜ்யத்தை நாம் உண்மையாக விரும்பினால் முதலில் தர்மத்தைப் பரிபாலிக்க வேண்டும். இப்போது நமக்கு எது நியாயமாய்த் தோன்றுகிறதோ அதுவே தர்மமென்பது ஹிந்து மதத்திற்குப் புறம்பே இருப்பாருடைய பேச்சு. தர்மமென்பது சாஸ்திரத்தைக்கொண்டே அறியப்படும் பொருள் என்பது நமது மதம். காலத்தை அநுஸரித்துத் தர்மமும் மாறுமேயெனில் இதையும் சாஸ்திரம் கொண்டே அறியவேண்டும். காலத்தை யநுஸரித்து இன்னும் ஸூர்யன் கிழக்கே உதிப்பதை மாற்றிக் கொண்டு தெற்கே உதிக்கவில்லை. நம் கண் செய்யும் காரியத்தைக் காது இன்னும் செய்யவில்லை. சோம்பலாலும் அறியாமையாலும் அநாதரவாலும் செய்ய வேண்டியவற்றைச் செய்யாமல் தத்கால ஸௌகர்யத்தை உத்தேசித்தும் பக்ஷபாதத்தாலும் த்வேஷத்தாலும் செய்யக் கூடாததைச் செய்து கொண்டிருப்பவர்கள் வெகு லேசாக காலத்திற்கேற்பத் தர்மங்களை மாற்ற வேண்டுமென்பது மிகமிக வருந்தத்தக்க விஷயம். நம்முடைய தர்மங்கள் மனிதர்களாலேற்படுத்தப் பட்டவையல்ல. அநாதியாயிருப்பவை. வேதம் முதலிய சாஸ்திரங்

களாலறியப் படுமவை. உலத்தின் யோகக்ஷேமத்திற்காக அநுஷ்டிக்கப்பட வேண்டியவை. இவற்றைப் பரிபாலிப்பதே அரசர்களின், அரசாட்சி புரிவோரின், முதற்கடமை; முக்கியக் கடமை; ஸநாதநதர்மத்தை மாற்றுவதோ புது தர்மத்தை ஏற்படுத்துவதோ அல்ல. இவ்விஷயத்தை எத்தனை தடவை சொன்னாலும் எத்தனை விதமாய்ச் சொன்னாலும் மிகையாகாது. ஆயினும் விரிவுக்கஞ்சி இத்துடன் நிற்பது. எல்லா ஜநங்களும், விசேஷித்து அரசாங்க ஸம்பந்தமுள்ளோரும், இதை ஊன்றிக் கவனித்துத் தக்கபடி முயன்றால் முழு ராம ராஜ்யம் வராவிட்டாலும் சிறிதளவாவது வரலாம்.

## 20. முயற்சி.

ராம ராஜ்யம் என்று பேசுகிறார்களே யொழிய உண்மையில் நாம் அவ்வித ராஜ்யத்தை ஸ்தாபிக்க முடியுமா என்று பலர் ஸந்தேஹப்படலாம். இவர்களுக்கும் சாஸ்திரம் ஸமாதானம் கூறுகின்றது. நாஸ்திகாயிருக்கு மவர்கள் ஒரு பலத்தைக் கோரிப் பெரு முயற்சி செய்து கடைசியில் கோரின பலத்தைப் பெறாவிட்டால் மிகவும் வருந்தலாம். பகவானை நம்பி அவன் கட்டளை யென்று உரிய கர்மங்களைச் செய்ய முயல்பவர்களுக்கு இவ்வித வருத்தத்திற்கு இடமே இல்லை. "கடமையைச் செய்வோம். பலன் கிட்டுவதும் கிட்டாததும் அவனது ஸங்கல்பத்தைப் பொறுத்தது." என்று இத்தகைய ஸாத்விக த்யாகமென்று வழங்குகின்ற பற்றில்லாமையோ டன்றோ இவர்கள் எக் காரியத்தையும் செய்வது. சில யத்தனங்கள் பலிக்காவிடில் 'எம்பெருமானுக்கு இது திருவுள்ளமில்லை' என்று கொள்வது தவிர வருத்த மெங்கிருந்து வரும்? மேலும், நல்ல காரியம் மிகச்



சிறிதளவே செய்யப்பட்ட தாயினும் அது ஒருகாலும் வீண் போகாது என்கிறார் ஸ்ரீ க்ருஷ்ணன்.

உலகத்திற்கு க்ஷேமம் உண்டாகுமாயின் இந்த வழியில் தான் உண்டாகு மென்பது நம்முடைய மதக் கோட்பாட்டின்படித் தீர்ந்த பொருள். ஆகையால் இதை நாம் அநுஸரிக்கக் கடமைப் பட்டிருக்கின்றோம். பலனைப் பற்றிய சிந்தையை நாம் அதிகமாகப் படவேண்டியதில்லை. விடா முயற்சியோடு இவ் வழியில் நின்று நாமெல்லோரும் செய்ய வேண்டியதைச் செய்தால் கால க்ரமத்தில் உத்தேசித்த பலன் கிடைக்காமல் போகாது என்பதும் நிச்சயமே. ஆகையால்

> ஸந்தேஹக் காரனுக்கு இந்த லோகமுமில்லை
> பரலோகமுமில்லை ஸுகமுமில்லை.

என்று பகவான் அழுத்தமாக இகழ்ந்து பேசிய ஸம்சயத்தை அடியோடு விட்டொழித்து நமது தரும வழி யழியாமற் காப்போமாக.

## 21. அரசாங்கத்தார்.

இவர்கள் செய்ய வேண்டியதைப் பற்றி முன்பே பல படி கூறியிருக்கின்றோம். நாட்டின் அமைதியைக் காக்க வேண்டியது மிகவும் அவசியமாதலின் கிளர்ச்சி எழக் கூடிய எந்த விஷயத்தையும் பற்றி இவர்கள் தீர்மானம் செய்ய முற்படக் கூடாது. தண்ட ப்ரயோகத்தைக் கொண்டு கிளர்ச்சியை யடக்கி விடலாமென்ற தைரியத்துடன் ஜநங்களுக்கு ஸம்மதமல்லாத சட்டத்தை இயற்றுவது சிறந்த ராஜ தந்திரமன்று. முதலில் பிரசாரம் செய்து, ஜநங்கள் ஒப்புக் கொண்டு அநுமதிக்குமாறு தக்க நிலையை ஏற்படுத்திக் கொண்டு பிறகு சட்ட மியற்ற வேண்டும். எதிர்ப்பு இருந்

தால் எதிர்ப்பவர் சிலரே யாயினும் உண்மையாக அவர்கள் மனதில் வருத்த மேற்பட்டு மூர்க்கத்தனமாய் அரசாங்கம் நடக்கிறதென்று அவர்கள் எண்ணும்படி ஒன்றும் செய்யக் கூடாது.

மத ப்ரசாரத்திற்கும் அதன் ஸம்ரக்ஷணத்திற்குமாக ஏற்பட்ட மடங்களின் நிர்வாஹத்தை யெல்லாம் தாமே எடுத்துக் கொள்ள உத்தேசித்து அதற்குத் தக்க அதிகாரத்தைத் தங்களுக்குக் கொடுக்கும் சட்ட மொன்றை இயற்ற இப்போது அரசாங்கத்தார் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். சட்ட நிபுணர்களும் மதப் பற்றுள்ளவர்களும் "மிகுந்த அபாயத்திற்கு ஹேதுவானது. 'மத ஸம்பந்த மற்ற அரசாங்கம் இது' என்று ஸமஷ்டி அரசாங்கத்தில் தீர்மானமாகியிருப்பதற்கு விருத்தமானது" என்று எவ்வளவோ கதறியும் ஆட்சேபித்தும் அதை ஒன்றும் காதில் வாங்காமல் பிடிவாதமாய் இச் சட்டத்தை இயற்ற நிச்சயித்திருக்கின்றனர். நாடு அமைதியாய் க்ஷேமமாய் இருக்க வேண்டும் என்ற உத்தேசமிருப்பவர்கள் இப்படிச் செய்யலாகாது. "மடங்களில் எத்தனையோ அக்ரமங்கள் நடக்கின்றன. அவற்றை யெல்லாம் வெறுமனே அரசாங்கத்தார் பார்த்துக் கொண்டிருப்பதா? அக்ரமம் எங்கு நடந்தாலும் அதைக் கவனித்து அரசாங்கம் பரிஹாரம் செய்ய வேண்டாமா?" என்று பதில் சொல்லுகிறார்கள். அரசாங்கத்தார் நியமிக்கும் அதிகாரிகள் ஒரு அக்ரமும் செய்யாமல் ராம ராஜ்ய முறையையே கையாண்டு வருவர்கள் என்ற நிச்சயம் ஏற்பட்டு விட்டதாயின் ஒரு ஸமயம் இது நியாயமாகலாம். எத்தனையோ கலெக்டர்களும் உயர்ந்த போலீஸ் அதிகாரிகளும் லஞ்சம் வாங்கினதாக நிரூபணமாகித் தகுந்த நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறதென்று தாமே சொல்லு



கிறார்கள். நிலை இப்படி யிருக்க ஒரு அக்ரம ரீதி மாறி மற்றொரு அக்ரம ரீதி வருகின்றது என்பதைவிட வேறு என்ன பலன் இந்தச் சட்டத்திலிருந்து கிடைக்கும்?

அரசாங்க முள்பட நாடெங்கும் அக்ரமம் ஒழிந்து நியாயமாய்ப் பிழைப்பது என்ற நிலை உண்டாகிவிட்டால் இந்த அக்ரமமும் தானாய் நின்று விடுகிறது. இதற்குத் தனியே ஒரு சட்டமெதற்கு? இது இயற்றப்பட்டால் விபரீத பலன் ஏற்படுவதும் அநேகமாய் நிச்சயமே. மடங்களில் மதத்தில் மிகுந்த பற்றுதலும் வித்யா விஷயத்தில் அபாரமான யோக்யதையும் ஸதாசாரமும் நிறைந்த மஹான்கள் பகவானுக்கு மிகுந்த பக்தியுடன் தாமே ஆராதநம் அதாவது பூஜை நடத்திக் கொண்டும் அதில் செல்லும் காலந் தவிர மற்ற காலங்களில் சிஷ்யர்களுக்கு உபதேசங்களையும் பல சாஸ்த்ரோக்த மோக்ஷார்த்த காரியங்களையும் செய்து கொண்டும் புராதந தர்ம மார்க்கத்தைக் காப்பாற்றி வருகிறார்கள். அரசாங்கத்தாரால் நியமிக்கப் பெற்ற அதிகாரிகள் மத ஸம்பந்தமான விஷயங்களின் முக்கியத்வத்தை உள்ளபடி உணராது அவற்றில் அச்ரத்தையோடும் வெறுப்போடுமிருந்து, வரும் பணத்தைத் தாங்கள் தமது எண்ணப்படி முக்கியமான வேறு விஷயங்களுக்காகச் செலவிட்டுக் கொஞ்ச காலத்தில் மடங்களே அழியும்படியான நிலைக்குக் காரணமாவார்கள். அரசாங்க அதிகார நிர்ப்பந்தங்களுக்கு உட்பட்டுத் தம்மைப் பாராதீனமாக்கிக் கொண்டிருக்கப் பல சாஸ்திரங்களைக் கற்று ஆத்ம க்ஞானம் நிறைந்து ஆசார்ய பீடத்திற்கேற்ற அத்புத யோக்யதை வாய்ந்த எந்த மஹா புருஷரும் ஸம்மதிக்க மாட்டாராகையால் மதம் கொஞ்சமாவது ஜீவத்திருப்பதற்கு ஹேதுவான மடம் என்ற ஸ்தாபநமே சிறிது காலத்தில் இருக்குமிடம் தெரியாமல் போய்விடுமென்

பதில் ஸந்தேஹமில்லை. ஆகையால் தீர்க்காலோசனையுடனும் பல பெரியோர்களைக் கலந்து ஆலோசித்து அவர்கள் ஸம்மதத்துடனும் செய்யவேண்டிய இது போன்ற விஷயங்களை அரசாங்கத்தார் அவஸரமாகப் பிடிவாதத்துடன் செய்வது எவ்விதத்திலும் விரும்பத் தக்கதன்று. அழித்தல் வெகு எளிது. ஒன்றை ஸ்தாபிப்பது வெகு கடினம். அவஸரமில்லாமல் ஆக்ரஹமில்லாமல் ஆலோசித்துப் பார்க்க வேண்டும்.

மற்றொரு விஷயம் இதே போல் மிகவும் வருந்தத்தக்க முறையில் நமது அரசாங்கத்தாரால் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. உத்யோகத்திற்காக உயர்தரப் பள்ளிக்கூடங்களில் படிக்கும் மாணவர்கள் விரும்பினால் ஸம்ஸ்க்ருதம் படிக்க இதுவரையில் வசதி இருந்தது. நமக்கு ஸ்வராஜ்யம் வந்த உடனே இது அபஹரிக்கப் பட்டிருக்கிறது. ஸம்ஸ்க்ருதம் தமிழ் இரண்டும் நமக்கு இரு கண்கள். ஒன்றை ஒழித்து ஒன்றை மாத்திரம் விருத்தி செய்ய விரும்புவோர் ஒற்றைக் கையை மாத்திரம் வைத்துக் கொண்டு தொழிலபிவிருத்திக்குப் பாடு பட எண்ணுமவர்களோடு ஒப்பாவார்.

தேச பாஷையைக் கற்கவேண்டு மென்பதைப்பற்றி எவரு மாக்ஷேபிக்க மாட்டார்கள். ஆங்கிலமும் தற்காலம் அவச்யமென்று எல்லோரும் ஸம்மதித்த விஷயம். ராஷ்ட்ர பாஷை ஹிந்தியாதலால் அதையும் உபேக்ஷிக்க முடியாது. நம்முடைய மதத்திற்கும் புத்திப் பயிற்சிக்கும் ஆத்ம ஞானத்திற்கும் இன்றியமையாத ஸம்ஸ்க்ருதத்தையும் விடுவதற்கில்லை. தமிழ் நாட்டில் பிறந்தவன் தமிழ் கற்பது அவசியம். அதே போல் பாரத நாட்டில் பிறந்தமையால் ஸம்ஸ்க்ருதம் கற்பதும் அவச்யம். ஆகையால் இதையும் எல்லா மாணவரும் கற்க வேண்டு மென்று கட்டாயமாக்குவது வெகு



நியாயமான விஷயம். ஆயினும் எதையும் கட்டாயமாகச் செய்யச் சொல்வது அவ்வளவு உசிதமன்றாகையால் அறிஞர்கள் இதை இப்போது வற்புறுத்த மாட்டார்கள். இப்படி எல்லோரும் கற்கவேண்டிய அவ்வளவு முக்கியத்வம் வாய்ந்த இந்தப் பாஷையை இத்தனை காலமாக இருந்த முறையில் சில மாணவர்கள் கற்க விரும்பினால் அதற்குத் தடை செய்வது அரசாங்கத்தாருக்கு அழகல்ல. நாட்டின் பாஷைகளில் ஒன்றான அதுவும் விருத்தியாகும்படி, எப்படியும் அழியாமலிருக்கும்படி, முயல வேண்டியது ஸர்வ க்ஷேமத்தையும் பாதுகாக்க வந்த அரசாங்கத்தாரின் கடமை. அதைவிட்டு இது வரையில் அதைக் கற்க இருந்த வசதியைக் கூடக் கெடுப்பது அதர்மம். நாட்டின் நன்மைக்கு ப்ரதிகூலம்.

ஹிந்தியையாவது ஸம்ஸ்க்ருதத்தையாவது கற்கலாமென்று விகல்ப பாடமாக வைத்திருப்பதால் அதைக் கற்கத் தடை ஒன்று மில்லையே என்பது தகுந்த ஸமாதானமன்று. ஹிந்தி ராஷ்ட்ர பாஷை. பள்ளிக்கூடத்தில் இப்போது அறிவுக்காக ஒருவரும் வாசிக்கவில்லை. எல்லாப் படிப்பும் உத்யோகம் என்ற ஓரே நோக்கத்துடன் தான். ஹிந்தி கற்றால் தான் இனி உத்யோகம் கிடைக்குமென்றே இப்போதைய நிலை யிருப்பதால் ஹிந்தியை விட்டு ஸம்ஸ்க்ருதம் படிக்க ஒரு மாணவனும் விரும்ப மாட்டான். ஹிந்தியுடன் ஸம்ஸ்க்ருதமும் கற்பதானால் பலர் விரும்புவார்கள். ஆகையால் கிரியாம்சத்தில் ஸம்ஸ்கிருத படிப்புக்குத் தடையே தான் செய்திருக்கிறது. இந் நாட்டில் பிறந்த ஒருவன் தனது கல்வி முறையில் ராமாயணம் மஹா பாரதம் ரகுவம்சம் முதலியவற்றை ஒழிந்த போது படிப்பதற்காக வேண்டிய அல்ப யோக்யதையைப் பெறக் கூட இடமில்லையென்று வருந்தும்படி அரசாங்கத்தார் ஏன் செய்ய வேண்டும்? தேச

பாஷையின் வளர்ச்சிக்காக என்பது பொருந்தாது. உயர்தரப் பள்ளிக்கூடங்களில் பாடம் கற்பிப்பதனால் பாஷை வளர்வது என்பது ஸம்பவிக்காது. புலமை உண்டாகிப் பாஷையையும் நூல்களையும் ஆராய்ந்து முதிர்ந்த கட்டுரைகளை எழுதுவது வெளியிடுவது எல்லாம் உத்தம கலாசாலை பல்கலைக் கழகம் இவற்றிலுள்ளோரின் வேலை. பிழையின்றி எழுதப் படிக்கக் கற்று ஸாதாரண உலக நடைக்கேற்ற நிலையிலிருப்பதும் உத்தம கலாசாலைகளில் சேர்வதற்குரிய யோக்யதையைப் பெறுவதும் தான் உயர்தரக் கல்லூரி (ஹைஸ்கூல்)யில் கற்கும் பாடங்களின் உத்தேசியம். இதற்கேற்றவாறு தேச பாஷையைக் கற்பதற்கு ஸம்ஸ்க்ருத பாடம் குந்தகத்தைச் செய்யாது.

தாய்ப் பாஷையான தமிழை ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் கற்பதாலேயே அனேகமாகப் பிழையின்றி எழுத்திலும் பேச்சிலும் உபயோகப்படுத்த வல்லமை உண்டாகி விடுகின்றது. உயர்தரப் பள்ளிக்கூடங்களிலும் அதற்காக வாரத்திற்கு நான்கு மணி கொடுத்து முதல் பாரம் முதல் ஆறு வருஷம் வியாஸம் முதலிய எழுதியும் சில நூல்களைக் கற்றும் அப்யாஸம் செய்தால் வேண்டிய அளவுக்கு மேல் வல்லமை உண்டாவதில் ஸந்தேஹமே இல்லை. இதற்குமேல் தமிழையே கற்க வேண்டுமென்று நிர்ப்பந்தப்படுத்துவது ஸம்ஸ்கிருதத்தைக் கற்கத் தடை செய்வது போன்ற மற்றொரு பெரும் தவறே. சிலர் ஹிந்தி ஸம்ஸ்க்ருதம் இரண்டும் வேண்டாமென்று கூச்சலிடுகின்றனர். அவர்களை ஹிந்தியைப் படித்தே ஆக வேண்டுமென்ற நிர்ப்பந்த மேற்படும்படி செய்திருப்பதும் அவ்வளவு ஆவச்யகமன்று. கால க்ரமத்தில் அவர்களே உண்மையை உணரும்படி விட்டு விட்டுத் தற்காலம் கிளர்ச்சிக்கு இடங்கொடாதிருக்கலாம்.



| | | |
|---|---|---|
| முதல் பர்ஷை. | இரண்டாம் பாஷை. | மூன்றாம் பாஷை. |
| பாகம் 1. 4 மணி தேச பாஷை. | இங்கிலீஷ். | ஹிந்தி க்ரீக் லாடின் பார்ஸி முதலியவற்றுள் ஒன்று. |
| பாகம் 2. 5 மணி தேச பாஷை அல்லது ஸம்ஸ்க்ருதம். | | அல்லது டைப் முதலிய பாஷையல்லாத பாடங்களில் ஒன்று. |

இப்படிப் பாட நியமம் வைத்தால் ஒருவருக்கும் ஒருவித கஷ்டமோ மன வருத்தமோ உண்டாகக் காரணமிராது. இப்படிச் செய்யாமல் வேறு விதமாகச் செய்தது தேச பாஷையில் பக்ஷபாதமும் ஸம்ஸ்கிருதத்தில் அனாதரவும் அரசாங்கத்தாரிடம் இப்போது மிகுந்து நிற்கிறதென்று பலர் நினைப்பதற்கும் சொல்வதற்கும் இடம் தராமலிருக்க முடியாது. உத்தம அரசாங்க முறைக்கு இது தகுந்ததன்று. இவ்வித விஷயங்களில் வெகு கவனத்துடன் அரசாங்கத்தார் இருக்க வேண்டும்.

## 22. பிரஜைகள்.

தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் போது ஜனங்கள் நிரம்ப விவேகத்துடனும் நேர்மையுடனும் இருக்க வேண்டுமென்று முன்பு கூறப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதிகள் அரசாங்கத்தை நடத்தும் போது ஜனங்கள் அவர்களால் பாதுகாக்கப்பட வேண்டிய பிரஜைகளாகின்றனர். அரசாங்கத்தாரிடம் அவர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பதை இவர்கள் நன்றாக அறிய வேண்டும். இல்லாவிட்டால் தலைவர்கள் எவ்வளவு யோக்யர்களாக இருந்தாலும் அரசாங்கம் சரிவர நடைபெறாது. அரசாங்கத்தை நடத்தும் தலைவர்களிடத்தில் பெரிதும் மதிப்புக் காட்ட

வேண்டும். மஹா ஜனங்கள் அவர்களை அலட்சியம் செய்தால் திருடர்கள் கொலைக்காரர்கள் முதலிய ஸமூஹத்ரோஹிகளுக்கு அவர்களிடத்தில் பயமுண்டாகாது. மேன் மேலும் குற்றங்களைச் செய்ய முற்படுவார்கள்.

ஒத்துழையாமை ஸத்யாக்ரஹம் இவை போன்றவை எல்லாம் அயல் நாட்டாரின் ஆதிக்கத்தை ஒழிப்பதற்காகக் கையாளப்பட்ட வழிகள். இவைகளை இப்போது நாம் நினைக்கவே கூடாது. ஏற்படுத்தப்பட்ட சட்டம் மிகவும் ஒழுங்கீனமானதாயினும் ஸாத்விக முறையில் அதை மாற்றுவதற்கு முயல வேண்டுமே யன்றிச் சட்ட விரோதமாக ஒன்றும் செய்யக் கூடாது. பொறுத்திருந்து மறுபடி இவ்விதத் தலைவர்கள் அரசாங்கத்தில் ஸ்தானம் பெறுதபடி செய்ய வேண்டும். அமைதி குலையும்படி கிளர்ச்சி செய்யக் கூடாது.

அவரவர்கள் வஸிக்கும் கிராமங்களிலும் நகரங்களிலும் அக்ரமம் ஒன்றும் நடக்காமல் அவரவர்களே பார்த்துக் கொள்ள வேண்டும். ராஜ்யத்திற்கு அங்கமென்பதற்காகக் கொஞ்சம் போலீஸும் சில நியாய ஸ்தலங்களும் இருக்க வேண்டுமே யன்றி மேல் மேல் போலீஸ் படையும் நியாய ஸ்தலங்களும் அதிகமாகி வரியும் வ்யவஹாரச் செலவும் விருத்தியாகும்படி தமது நிலைமையைச் செய்து கொள்ளக் கூடாது.

பட்டினி கிடக்காமல் புசிப்பதும் கந்தையில்லாமல் உடுப்பதும் உடலுக்கு நோய் வாராமல் தடுப்பதற்குரிய ஸௌகர்யங்களைச் செய்து கொள்வதும் தவிர ஆடம்பர வாழ்க்கையில் ஈடுபடக் கூடாது. ஒருவர்க்கொருவர் ஸ்நேஹபாவத்துடனும் மரியாதையுடனும் பழக வேண்டும்.



அவரவர்களுடைய குலாசாரங்களை ச்ரத்தையுடன் அநுஷ்டித்து அவற்றுடன் தமக்குரிய தொழில்களையும் சோம்பலின்றிச் செய்ய வேண்டும். நாட்டில் ஒரு மனிதனும் சோம்பேறியா யிருக்கக் கூடாது.

முதலாளிகள் வியாபாரிகள் வர்த்தகர்கள் எல்லோரும், பேராசை யுள்ளவர்கள் என்று ஜனங்கள் கருதா வண்ணம் உசித லாபத்தோடு த்ருப்தியடைந்து யோக்யமாய்த் தமது தொழிலை நடத்த வேண்டும். இயந்திரங்கள் இருப்புப் பாதை இவை முதலியவற்றில் வேலை செய்யும் ஆள்கள் வேலை நிறுத்தம் என்பதைக் கனவிலும் நினையாது தம்முடைய குறைகளை நேர் வழியில் அறிவித்துத் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

பொது உடைமை போன்ற கக்ஷிகள் நம் நாட்டிற்குப் புதியன. நம் நாகரிகத்திற்குச் சிறிதும் ஒவ்வாதவை. ஹிம்ஸையையே முக்கியமாகக் கொண்டவை. இவ்வுபத்திரவங்கள் நமது நாட்டில் தலை யெடுக்காதபடி செய்ய வேண்டும். இப்படியே நிரீச்வர வாதமும் இங்கு இடம் பெறுதபடி செய்ய வேண்டும். இவ்வாதத்தில் பற்றுள்ளவர்கள் தயா தாக்ஷிண்ய மற்றவர்களாயும் த்வேஷ மனப்பான்மை நிறைந்தவர்களாயும் ஹிம்ஸையில் தயக்கமில்லாதவர்களாயும் இருப்பது நிச்சயம். இவர்களால் ஸமூகத்துக்கு பேராபத்து உண்டாகும். இவர்களைச் சிறிதும் ஆதரிக்காமல் கால க்ரமத்தில் நல்ல வழிக்குக் கொண்டுவர யத்தனப்பட வேண்டும். ஜனங்கள் எல்லோரும் மனதைச் சரியான நிலையில் நிறுத்தித் தமது கடமைகளை ஒழுங்காய்ச் செய்வாராயின் அதுவே ராம ராஜ்யமாகும்.

## 23. பிரார்த்தனை.

*பகவானுக்கு ஸகல உபசாரங்களுடன் பூஜை செய்தும் ஸ்ரீமத் ராமாயணம் ஸ்ரீ பாகவதம் முதலிய இதிஹாஸ புராணங்களைப் பாராயணம் செய்தும் முடிவில் பெரியோர்கள் நாட்டின் நலத்திற்காகச் செய்யும் பிரார்த்தனையை இங்கு நாம் செய்து நிற்போம்.*

(1)

மழை பெய்ய வேண்டும்; காலத்தில் பெய்ய வேண்டும். பூமி பயிர்களால் ஆனந்தத் தோற்றமளிக்க வேண்டும். நாடு எவ்வித குழப்பமுமில்லாமலிருக்க வேண்டும். ப்ராம்மணர் பயமற்றிருக்க வேண்டும்.

*மழை பெய்து பயிரெல்லாம் விளைந்து ஸுபிக்ஷமுண்டாகி நாடெங்கும் சாந்தி நிறைந்திருக்க, இவ்வுபகாரங்களைச் செய்தருளிய தேவர்களுக்கு நமது நன்றியைச் செலுத்துவதற்காகவும் மேலும் இப்படியே மழை பெய்து அவர்கள் நம்மை வாழும்படி செய்வதற்காகவும் வேள்வி செய்ய வேண்டும். மற்றவர்கள் உபகரிக்க, வேள்வியை ஸாக்ஷாத் செய்ய வேண்டியவர் பிராம்மணர். ஆகவே உலக க்ஷேமத்திற்காக இவர்கள் வேள்வி செய்யும் போது 'எந்தத் துஷ்டர்கள் வந்து என்ன உபத்திரவம் செய்வார்களோ' என்ற பயம் இவர்களுக்குச் சிறிதுமில்லாமலிருக்க வேண்டுமென்கிறது.*

(2)

பிரஜைகள் நன்றாய் இருக்க வேண்டும். அரசு புரிவோர் நாட்டை நியாயமான வழியில் பரிபாலிக்க வேண்டும். பசுக்களும் பிராம்மணர்களும்



எப்போதும் க்ஷேமமாய் இருக்க வேண்டும். ஸமஸ்த ஜநங்களும் ஸுகம் பெற்றிருக்க வேண்டும்.

*பிரஜைகள் க்ஷேமமாய் இருக்க வேண்டியது முக்கிய உத்தேசம். ஆகவே முதலில் இதைக் கோரிப் பிறகு இதற்காக நியாயமான முறையில் அரசு நடத்தப்பட வேண்டுமென்பது கோரப்படுகின்றது. இதற்கெல்லாம் மூல காரணம் மழையைக் கொடுக்கும் வேள்வி. இதைச் சாஸ்திரப்படி அனுஷ்டிப்பதற்காக அந்தணர்களின் நலமும் வேள்விக்கு வேண்டிய ஹவிஸ்ஸாகிற பாலைக் கொடுக்கும் கோக்களுடைய நலமும் அதன் பிறகு வேண்டப்படுகின்றது. இப்படிப் பிரஜைகள் அரசர்கள் கோக்கள் அந்தணர்கள் என்று தனித் தனியே எடுத்து உசிதமான பிரார்த்தனையைச் செய்து, முடிவில் ஸமஷ்டியாக எடுத்து ஸர்வ ஸுகம் வேண்டப்படுகின்றது—*

*"ஸமஸ்த ஜனங்களும் ஸுகம் பெற்றிருக்கவேண்டும்" என்று. இப் பிரார்த்தனையை எப்போதும் செய்து அது நிறைவேறுவதற்குரிய அவனது திருவருளைப் பெற்று ராம ராஜ்யத்தை ஸ்தாபித்து நீடூழி வாழ்வோமாக.*

ராம ராஜ்யம் முற்றும்.

NADU ARCHIVES LIBRARY MADRAS
108806
W
N49

வாழ்க்கை முறையை நாம் முழுவதும் ஆதரிப்போமாகில் நாமும் அதே விதமான சங்கடத்திற்குள்ளாவது தவிர அவர்களுக்குச் சரியான மார்க்கத்தைக் காட்டித்தர நமக்கு ஆற்றல் எங்கிருந்து வரும்?

இவ்வித எண்ணங்கள் நெடு நாளாக நம்மை வதைத்து வருகின்றன. ஆனால் பாரத இவ்வுலகில் ஒரு புழுப் போன்ற ஒருவன் என்ன செய்யக் கூடும்? அவனது சக்தி எவ்வளவு? ஒரு ஸமயம் "உலகத்தில் பொய் சொல்வது ஸஹஜமாய் விட்டதே. தகுந்த போதனை செய்து அப் பழக்கத்தை விட்டுவிடும்படி ஜனங்களைத் திருத்த வேண்டும்" என்று சொல்ல நேர்ந்தது. மறு க்ஷணத்தில் "நீங்கள் ஸ்வப்ந உலகில் இருக்கின்றதாகத் தெரிகின்றது" என்ற பதில் கிடைத்தது. மற்றும் பலர் இவ்வித முயற்சி எல்லாம் பைத்தியக்காரத்தன மென்றே கருதுகின்றனர். குண விஷயத்தில், சீர்திருத்தம் செய்யக் கூடிய எல்லையைக் கடந்து அவ்வளவு மோசமாகிவிட்டது உலகின் நிலை என்பது இவர்களின் தீர்மானம். ஆகிலும் நமது உத்ஸாஹம் குறையவில்லை. 'நல்லது செய்தால் கேடு வாராது' என்ற பகவத் வாக்யத்தில் நம்பிக்கை உடையோமாதலின் ஏதாவது செய்ய வேண்டுமென்று எண்ணினோம். ஆனால் எளியவர்களின் எண்ணம் எங்ஙனம் பலிக்கும்? இப்படி வெகு காலம் சென்ற பின் இப்போது குலம் சீலம், வயது வித்யை, ஆச்ரமம், ஞானம் வைராக்யம் அனுஷ்டானம், பக்தி தயை எல்லாவற்றிலும் முதிர்ச்சி பெற்ற பெரியோர்களின் அநுக்ரஹ விசேஷத்தால் இந்த 'ராம ராஜ்யம்' வெளி வருகின்றது. இதில், புதிதாய், மற்றவர்கள் மனதில் படாத அபூர்வமாய் நாம் ஒன்றையும் கூறவில்லை. அனேகமாய் எல்லா விஷயங்களும் ப்ரஸித்தமானவையே. ஆகிலும் செய்ய வேண்டியவற்றைச் செய்யத் தவறாமலிருப்பது செய்யக் கூடாதவற்றை அறவே ஒழிப்பது என்ற இந் நிலை எங்கும் ஏற்படுவதற்காகத் தெரிந்த விஷயங்களை இங்கு நினைவு மூட்டப்பட்டிருக்கின்றன.

உலகத்தின் க்ஷேமத்தைக் கருதும் பெரிய மனதுடைய ஆஸ்திகப் பிரபுக்கள் இச் சிறு முயற்சி உத்தேசித்த பலத்தைத் தரும்படி உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம். தம்மை

வியன்றவரை நூறு, ஐம்பது, இருபத்தைந்து என்றிப்படி இப் புஸ்தகத்தின் பிரதிகளை வாங்கி ஆண்களுக்குப் படிக்க யோக்யதையுள்ள ஜனங்களிடத்தில் வழங்கி விஷயங்கள் அவர் மனதில் பதியும்படி செய்தால் இது நாட்டுக்கும் நமக்கும் பேருபகாரமாயிருக்கும்.

இவ்விதம் பல புஸ்தகங்களை அடுத்தடுத்து வெளியிட உத்தேசித்திருக்கின்றோம். பகவத் க்ருபையிருந்து நடக்க வேண்டும். இதற்கடுத்த புஸ்தகம் 'ஸ்ரீ ராமன்' என்பது.

நாம தமிழில் எழுதுவதை எல்லாம் திருப்பதி ஸ்ரீ. வேங்கடேச்வர ஆராய்ச்சி சாலைத் தமிழாசிரியரும் ஆழ்ந்த அரிய புலமையோடு தெய்வ பக்தியும் ஆத்ம குணங்களும் நிரம்பப் பெற்றவருமான ஸ்ரீ T. P. பழனியப்ப பிள்ளை அவர்கள் சோதித்துக் கொடுப்பது வழக்கம். பல வேலைகளின் மத்தியில் இவர்கள் இப்படிச் செய்து வரும் உபகாரத்தை நாம் எப்பொழுதும் நினைத்திருக்கக் கடமைப் பட்டிருக்கிறோம்.

விரோதி சித்திரை 9௳.

"ராமராஜ்யம்"
93, G. தெற்கு மாடவீதி, திருப்பதி.